மலர் - 26 | இதழ் -06 | ஜூன் 2025
Volume -26 | Issue - 06 | June 2025
தமிழ் மாத இதழ் / தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly / Per Copy Rs.20/-

# வளரும் விண்ணரசு
# VALARUM VINNARASU

இலவசம்!!

* நிபந்தனைக்கு உட்பட்டது




*Condition Apply

## நான் மன்னித்தால் எனக்கு மன்னிப்பு!

பரலோகம் செல்ல
மன்னிப்பு அவசியம்.

# பொதுச்சேவகரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான வளரும் விண்ணரசு வாசக சகோதர சகோதரிகளுக்கு, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகள்.



Dr. சார்லஸ் அவர்கள் கல்வெட்டை திறந்து வைத்தபோது...


திருமதி. ஆஷா அவர்கள் ரிப்பன் வெட்டியபோது....

மே மாதம் 4ஆம் தேதி மதுரை மாவட்டத்திலுள்ள, அயோத்திபட்டி கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயம், தேவநாம மகிமைக்கென்று மறு அர்ப்பணிப்பு செய்யப்பட்டது. இந்த ஆலயம் கட்டி முடிக்கப்படுவதற்கு உதவியவர்களை மீண்டும் நினைவுகூர்ந்து, அவர்களுக்கு நன்றி நவில்கிறோம். சிறப்பாக, சகோ.சோபியா சுரேஷ் அவர்கள் குடும்பத்தையும், ஆர்தர் அய்யா அவர்கள் குடும்பத்தையும் நினைவுகூர்கிறோம்.

காலை 11 மணிக்கு Dr. சார்லஸ் அவர்கள் கல்வெட்டைத் திறந்து வைக்க, சகோ.சோபியாவின் சகோதரியும், நமது பொதுக்குழு உறுப்பினர் திரு.சிசில் புருசோத்தமன் அவர்களின் மனைவியுமான திருமதி. ஆஷா அவர்கள் ரிப்பன் வெட்டி ஆலயத்தை திறந்து வைத்தார்கள். தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர் அருள்திரு. இம்மானுவேல் பாண்டி அவர்கள் அர்ப்பணிப்பு ஜெபத்தை ஏறெடுத்தார். திரு. சிசில் புருசோத்தமன் அவர்கள் தேவ செய்தியை பகிர்ந்து கொண்டார்.




தமிழ்நாட்டில் நடைபெற்ற கோடை விடுமுறை வேதாகமப்பள்ளி.


சத்தீஷ்கரில் நடைபெற்ற கோடை விடுமுறை வேதாகமப்பள்ளி.

சபை போதகர் அருள்திரு. மூவேந்திரன் அவர்கள் சபை வரலாற்றை எடுத்துக் கூறினார். இவ்வாலயக்கட்டுமானப்பணியை ஆரம்ப முதல் மேற்பார்வையிட்டு, குறித்த நேரத்தில் கட்டி முடித்த அருட்பணியாளர் திரு. ராஜரத்தினம் அவர்களையும், பொறியாளர் திரு. பிரதீப் அவர்களையும் பாராட்டுகிறோம்.

கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளிக்காக, பயிற்சிகள் கொடுத்த அறிவர். தினகரன் அவர்களை பாராட்டுகிறேன். முற்றிலும் புதிய

தொடர்ச்சி கடைசிப் பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

அருள்திரு.G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திரு.V.S. தம்பிராஜ்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்

இதழின் உள்ளே...

| | |
|---|---|
| அருட்செய்தி! | 04 |
| கனவு காண வா! | 07 |
| துதித்து மன்றாடுவோம்! | 10 |
| வேதாகமத்தின் பக்கங்களிலே ... | 29 |
| மே மாத வினா-விடைகள்... | 31 |
| சரியான விடை எழுதியவர்கள் | 32 |
| வேத வினாக்கள் | 33 |
| நடப்புச் செய்திகள் | 34 |

| | ஆண்டு சந்தா | ஆயுள் சந்தா |
|---|---|---|
| இந்தியா : | ₹200/- | ₹1500/- |

சந்திக்கப்படாத மக்கள் கூட்டங்களை சந்தித்து சீடராக்கும் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி

**ICGM**

**58/1 முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை- 600 073.**

வளரும் விண்ணரசு குறித்த விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள அலைபேசி : 9003916480
ICGM Land Line: (044)2229 1045

contacticgm@gmail.com

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

**தரிசனம்:** (Vision Statement)

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்:** (வெளி. 7:9)

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங் களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலு மிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்."

**செயல்திட்டம்:** (Mission Statement)

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்பு திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்:** (மத்தேயு 28:19-20)

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

வளரும் விண்ணரசு பத்திரிகைக்கு செக், டிராப்ட் ஆன்லைன் மூலம் பணம் அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94 42 15 04 82 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.
A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

அருட்செய்தி

# மன்னிப்பு....நிபந்தனையுடன்

Rev.A. **லெஸ்லி நாகராஜன்**

இன்றைய அநேக சபைகளில் ஆராதனைகள் ஆரவாரங்களாகவும், உணர்வுகளைத் தூண்டி உற்சாகமளிக்கக்கூடியதாகவும் இருக்கும் இந்த காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அடிப்படை வேதசத்தியங்கள் இந்த ஆரவாரங்களினால் உதாசீனம் செய்யப்பட்டு வருகின்றன. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்குக் கற்பித்த ஜெபத்திலிருந்து மிக முக்கியமான அவரது அறிவுரை ஒன்றை நாம் இந்த செய்தியில் தியானிக்கப் போகிறோம்.

"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்". மத்தேயு 6:12.

**பாவங்கள் கடவுளையும் மக்களையும் காயப்படுத்துகின்றன; எனவே, மன்னிப்பு என்பது பரலோகத்தில் பிரவேசிக்க இன்றியமையாததாயிருக்கிறது**

கர்த்தருடைய ஜெபத்தில் மூன்று தேவைகள் கூறப்பட்டுள்ளன. முதலாவது "உணவு". அடுத்தபடியாக "கடன்" மற்றும் மூன்றாவதாக, "சோதனைக்கு நீங்கலாக்கும்" என்பது.

இவை மூன்றில், இரண்டாவது விண்ணப்பம் நிபந்தனையுடன் கூடிய வேண்டுதலாகும். மத்தேயு 18: 21 முதல் 35 வரை உள்ள வசனங்களில் இயேசு கிறிஸ்து இந்த நிபந்தனையை விளக்கிச் சொல்வதைப் பார்க்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் நாட்களில் யூத சமயத்தவர் தங்களது வேதத்தை சுயமாக தங்களுக்கு ஏற்றவாறு அர்த்தம் செய்து கொண்டிருந்தனர்.

அந்த பின்னணியம் உடைய பேதுருவும் இயேசுவிடம் வந்து, "ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ" என்று கேட்டார் (மத்தேயு 18:21). ஏழு முறை என்பது யூத கலாச்சாரத்தின் படி அதிகம். எனவே, ஏழு முறை மட்டுமோ? என்று பேதுரு கேட்டார்.

"ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்" என்று பேதுருவுக்குப் பதில் கூறும் ஆண்டவர் இயேசு, மத்தேயு 18: 23 முதல் 34 வரை உள்ள வசனங்களில் இதனைத் தம் சீஷருக்கு விரிவாக விளக்கிக் கூறுகிறார். இந்தப் பகுதியை மூன்று பிரிவுகளாகப் பார்க்கலாம்.

**1. கணக்குக் கேட்டு மன்னிக்கும் ராஜா:**

பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது (வச 23). 24ஆம் வசனத்தில், அவன் கடன்பட்ட தொகை பத்தாயிரம் தாலந்து என குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு தாலந்தின் அன்றைய மதிப்பு மட்டுமே 6 ஆயிரம் பணம் அல்லது 6 ஆயிரம் நாட்கள் வேலை செய்தால் கிடைக்கும் பணம் என எடுத்துக் கொள்ளலாம். (அந்த நாட்களில், நாம் மத்தேயு 20:13இல் வாசிப்பது போல, ஒரு நாள் கூலியாக ஒரு பணம் கொடுக்கப்பட்டது.)

ஆக, அந்த ஊழியக்காரன் தன் ராஜாவிடம் (10,000 தாலந்துகள் X 6,000 நாட்கள்) 6 கோடி நாட்கள் வேலை செய்தால் கிடைக்கக் கூடிய, அல்லது ஒரு

நாள் வார விடுமுறை எடுத்து, (6,00,00,000/313 நாட்கள்) 1,91,693 வருடங்கள் வேலை செய்து சம்பாதிக்க வேண்டிய, தன்னால் செலுத்தவே முடியாத அளவுக்குக் கடன்பட்டிருந்தான்.

வசனம் 25இல் இந்த ராஜா அந்த ஊழியக்காரனிடம் தனது மனைவி பிள்ளைகளையும் மற்றும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்றுத் தனது கடனைத் தீர்க்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழவிழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான் (வசனம் 26). ராஜா மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான் (வசனம் 27) என வாசிக்கிறோம்.

எண்ணிப் பார்க்க முடியாத மாபெரும் கடனை அந்த ஆண்டவன் அவனுக்கு மன்னித்து விட்டான். இதைப்போல, இத்தனை பெரிய மன்னிப்பை நாமும் நம் ஆண்டவரிடம் பெற்றிருக்கிறோம். இந்த விலைமதிப்பற்ற மன்னிப்பு இலவசம் தான். ஆனால், அது நிபந்தனைக்கு உட்பட்டது.

"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத்தேயு 6:12) என்ற நிபந்தனையை நாம் அறிந்தோ அறியாமலோ கர்த்தருடைய ஜெபத்தில் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

நம்மில் அநேகர் பல ஆறாத மனக் காயங்களுடனும், கசப்புடனும், மற்றவர்களை மன்னிக்க முடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குடும்பங்களிலும், சபைகளிலும், பணி செய்யும் இடங்களிலும் காயப்பட்டு வருத்தத்துடன் சஞ்சலத்துடன், வேதனையோடும் கசப்போடும் வாழும் மக்கள் அநேகர்.

மற்றவரை மன்னிக்க முடியாத வாழ்க்கை வாழும் நல்ல மனிதர்களும் ஊழியக்காரர்களும் பரிதாபத்துக்குரிய நரகவாசிகளே. நம்மை மன்னிக்கும் நமது ஆண்டவர் நல்லவர். ஆனால் அவர் நிபந்தனையற்ற மன்னிப்பைக் கொடுப்பதில்லை.

**2. மன்னிப்பு பெற்றும் மன்னிக்காத ஊழியர்:**

அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப்பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்கு கொடுத்துத் தீர்க்கவேண்டும் எனக் கூறுகிறான் (மத்தேயு 18:28).

26 ஆம் வசனத்தில் மன்னிக்கப்பட்ட ஊழியக்காரன் தன் ராஜாவிடம் வேண்டிக்கொள்ளும் வார்த்தைகளும், 29 ஆம் வசனத்தில் உடன் வேலைக்காரன் வேண்டிக்கொள்ளும் வார்த்தைகளும் ஒன்றாகவே இருக்கின்றன.

ஆனால், அவனோ சம்மதியாமல், போய், உடன் வேலைக்காரன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான் (வச 30).

வேலைக்காரர்கள் இதைக் கண்டு மிகவும் துக்கப்பட்டு, அந்த ஆண்டவனிடம் தெரிவித்தார்கள். மன்னிக்காத அந்த ஊழியக்காரனுடைய செயல்களை மறைக்க முடியவில்லை!

இந்த நாட்களில், சபைகளில், சொந்த வீடுகளில் மாமியாரை, மருமகளை, தம்பியை, அண்ணனை, மன்னிக்க முடியாதபடி மாய்மாலமாய் மன்னிப்பின் ரகசியங்களையும் பாடிப் போற்றி தங்களை தாங்களே ஏமாற்றிக் கொள்ளும் பரிதாபத்திற்குரியவர்கள் பலர் உண்டு.

தன் விருப்பத்தின்படி மணந்து, வீட்டை விட்டு வெளியேறிய தம்பதிகளை

சாகும் வரை மன்னிப்பதில்லை என முடிவெடுத்திருக்கும் பெற்றோர்களும் உண்டு. தேவ சமூகத்தில் நாம் எப்படி "எங்களை மன்னியும்" என ஜெபிக்க முடியும்? குரோதம், வைராக்கியம், இனவெறி மற்றும் பெருமைகளால் மற்றவர்களை மன்னிக்க முடியாத நாம் எப்படி இயேசுவின் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்?

**"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத்தேயு 6:12) என்ற நிபந்தனையை நாம் அறிந்தோ அறியாமலோ கர்த்தருடைய ஜெபத்தில் சொல்லிக் கொண்டு வருகிறோம்!**

இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7) என்ற வாக்குத்தத்தம், பிதாவின் இந்த நிபந்தனை மன்னிப்பை ரத்து செய்யாது என்ற உண்மை நமது மனதில் இருக்கட்டும்.

அநேக அற்புதமான வசனங்களை நாம் அறிந்து, அதன் நிபந்தனைகளை உணராது - மனம் போல வைராக்கியத்தோடும், கசப்போடும், கோபத்தோடும் வாழ்வது அறியாமையே.

**3. மன்னிப்போரை மட்டுமே மன்னிக்கும் பரமப்பிதா:**

நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார், ஆண்டவர் இயேசு (மத்தேயு 18:35).

நான் இரட்சிக்கப்பட்ட நாட்களில் இயேசு கிறிஸ்துவின் மன்னிப்பைக் குறித்து அதிகமாக விளக்கப்பட்டும், அறிவிக்கப்பட்டிருக்கிறேன். சங்கீதம் 103:12-இல் "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்" என்று வாசிக்கிறோம்.

உண்மைதான். ஆனால், பெரிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ள நிபந்தனை என்னவென்றால் - நான் மற்றவர்களை மன்னிக்கும் போது மாத்திரமே எனக்கு இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் பயனளிக்கும்.

மற்றவர்களை மன்னிக்காத மக்கள், தேவ அன்பை இழந்து விடுகின்றனர். அதற்கு மாறாக, போலியான அன்பை காட்சியாக்குகிறார்கள். மன்னிக்காத, கசப்புணர்வுடன் வாழும் மக்கள் சமாதானத்தை அனுபவிப்பதில்லை. அதனோடு கூடுதலாக மன அழுத்தம், தூக்கமின்மை, இரத்த அழுத்தம் உருவாகி, இதய நோய்களையும் வருவித்துக் கொள்கிறார்கள்.

இந்த செய்தியின் கடைசியிலே நாம் கூற விரும்புவது என்னவென்றால்: நாம் கடைசி காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 2தீமோத்தேயு 4:3 முதல் 4 வசனங்கள் எச்சரிப்பது போல, "...அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்கமனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்". இது தற்போது நிறைவேறி வருகிறது.

பாவத்தை விட்டு விலகவும், மற்றவரை மன்னிக்கவும் உபதேசிக்காமல், ஆடம்பரமான ஆராதனைகளில் தம்மை மறந்து, போகிற இடம் இன்னதென்றும், சேவிக்கிறவர் யார் என்றும் அறியாமல் வாழ்வது நல்லதல்ல.

தேவன் தாமே நமக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தருவாராக!

***

தன்வரலாற்றுத் தொடர்

கனவு காண வா!

07

# ஒரு விளையாட்டு நாடகம்: "எதை விதைத்தோமோ அதை அறுப்போம்"

(பழைய ஏற்பாட்டு யோசேப்பின் வாழ்க்கை வரலாறு)

அறிவு

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி நகர்ந்தன.

நாட்டின் பஞ்சம் இன்னும் கொடிதாகவே இருந்தது.

என் தம்பி பென்யமீனைப் பார்ப்பதற்காகவே சிமியோனைப் பிடித்து வைத்துக் கொண்டு "பென்யமீனுடன் வாருங்கள்" என்று, முன்பு தானியம் வாங்க வந்த என் உடன்பிறந்தாரைத் திரும்ப அனுப்பினேன். ஒவ்வொருவரின் பணத்தையும் திரும்ப அவரவர் சாக்குகளில் போடவும் ஆணையிட்டிருந்தேன்.

என் நினைவுகள் சிறகடித்துப் பறந்தன!! கேள்விகளால் என் உள்ளம் நிறைந்தது.

என் தந்தை எப்படியிருப்பார்? பென்யமீனை அனுப்புவாரா? தங்கள் பணம் திரும்பவும் சாக்குகளில் இருந்ததைப் பார்த்த என் அண்ணன்மார் மகிழ்ச்சியடைந்திருப்பார்களா–அல்லது பயந்திருப்பார்களா? திரும்ப தம்பி பென்யமீனுடன் வருவார்களா?

நான் எதிர்பார்த்த நாள் வந்தது. நான் ஒரு விளையாட்டு நாடகம் நடத்தத் தீர்மானித்தேன்.

**காட்சி ஒன்று.**

என் சகோதரர் யாவரும் பென்யமீனுடன் வந்து நின்றனர். பென்யமீனைப் பார்த்ததும் என் உள்ளம் மகிழ்ந்தது. என் வீட்டு விசாரணைக்காரனிடம், "இவர்களை என் வீட்டிற்கு அழைத்துச் செல். நல்ல உணவு தயார் செய். நான் அவர்களுடன் மதிய உணவு சாப்பிடுவேன்" என்று கூறினேன்.

அவனும் அப்படியே அவர்களை அழைத்துச் சென்றான். அவர்களையோ பயம் பிடித்தது. அவனிடம் "நாங்கள் முன்பு வந்து திரும்பியபோது நாங்கள் கொடுத்த பணம் எங்கள் சாக்குகளிலேயே இருந்தது. அதையும் திரும்பக் கொண்டு வந்திருக்கிறோம். யார் அதைச் செய்தார்கள் என்று எங்களுக்குத் தெரியாது" என்றார்களாம்.

என்னுடைய வீட்டு விசாரணைக்காரன் அவர்களின் பயத்தைப் பார்த்து, "நீங்கள் பயப்படவேண்டாம். உங்கள் தேவனும், உங்கள் தகப்பனின் தேவனும் அதைப் புதையல் போல உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்" என்று கூறி அவர்களை என் வீட்டிற்கு அழைத்துச் சென்றானாம்.

அவர்கள் வரும்வரை சிறையில் இருந்த சிமியோனும் விடுதலை பெற்று, அவர்களுடன் சேர்ந்துகொண்டான். மதிய உணவுக்கு அவர்கள் உட்காரும் இடங்கள், அவர்களின் வயதின்படி இருக்க, என் வீட்டு வேலைக்காரனுக்குச் சொல்லியிருந்தேன். அப்படியே அவன் கீழ்க்கண்ட வரிசையில்

உட்காரவைத்தான்.

1.ரூபன் 2.சிமியோன் 3.லேவி 4.யூதா 5.இசக்கார் 6.செபுலோன் (இவர்கள் என் பெரியம்மா லேயாளின் மக்கள்) 7.தாண் 8.நப்தலி (இவர்கள் என் தாயான ராகேலின் பணிப்பெண் பில்காளின் மக்கள்); 9.காத் 10.ஆசேர் (இவர்கள் பெரியம்மாவின் பணிப்பெண் சில்பாளின் மக்கள்); 11. பென்யமீன் (என் தம்பி).

எகிப்தியர் எபிரேயருடன் சேர்ந்து சாப்பிடமாட்டார்கள். எனவே, அதே அறையில் தனிப்பட ஒரு இடமும் அவர்கள் 11 பேருக்கும் மற்ற இடமும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நான் அவர்களுடன் சாப்பிடச்சென்றேன். அவர்கள் கொண்டு வந்த காணிக்கைகளையும், பரிசுப்பொருள்களையும் என் முன் வைத்து தரைமட்டும் குனிந்து வணங்கினார்கள்.

நான் அன்போடு பேசினேன். அவர்களின் சுகசெய்தியை விசாரித்தேன். முதிர்வயதான தந்தை எப்படியிருக்கிறார் என்று கேட்டறிந்தேன்.

என் சொந்தத் தம்பி பென்யமீனைப் பார்த்ததும் என் உள்ளம் பொங்கியது. என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வேறு ஒரு அறைக்குள் ஓடி அங்கே அழுதேன்.

பின்பு, வந்து உணவு சாப்பிட அமர்ந்தேன். என் உணவில் இருந்தும் அவர்களுக்கு பங்கிட்டு அனுப்பினேன். பென்யமீனுக்கு மட்டும் ஐந்து மடங்கு அதிகம் அனுப்பினேன். அவர்கள் யாவரும் மகிழ்ச்சியால் நிறைந்தனர்.

**காட்சி இரண்டு**

என் வீட்டு விசாரணைக்காரனிடம், "அவனவன் பணத்தை திரும்பவும் அவனவன் சாக்குகளில் போட்டுவிடு. பென்யமீன் சாக்கில் நான் குடிக்கப் பயன்படுத்தும் என்னுடைய வெள்ளிப்பாத்திரத்தைப் போட்டு அவர்களை அனுப்பிவிடு" என்று கூறினேன்.

அடுத்த நாள் காலை அவர்கள் புறப்பட்டனர். அவர்கள் அதிக தூரம் போவதற்கு முன்னர் என் காவலரை அனுப்பினேன். விசாரணைக்காரனும் சென்றான். கடுமையாக அவர்களிடம் இந்த வார்த்தைகளைப் பேச நான் சொல்லிக்கொடுத்தேன். அவனும் அப்படிச் செய்தான்.

"நீங்கள் நன்மைக்குத் தீமை செய்தது என்ன? என் தலைவர் குடிக்கப் பயன்படுத்தும் வெள்ளிப்பாத்திரத்தைத் திருடியது தகாத காரியம்! என் தலைவரின் ஞானத்தால் அதை அறிந்தார். நீங்கள் செய்தது மோசடி". அவர்கள் நடுங்கினர். கீழ்க்கண்டவாறு சொன்னார்களாம்.

நாங்கள் அப்படிச் செய்யவே மாட்டோம். சென்றமுறை எங்கள் சாக்குகளில் இருந்த பணத்தையே நாங்கள் காணிக்கையாகக் கொண்டுவந்தோமே. இப்போது பொன்னையோ, வெள்ளியையோ திருடுவோமா? யாரிடம் அது காணப்படுமோ அவனைக் கொல்லுங்கள். நாங்கள் யாவரும் தலைவரின் அடிமைகளாவோம்.

விசாரணைக்காரன் சொன்னானாம்: உங்கள் வார்த்தையின்படியே ஆகட்டும். எவனிடம் அந்தப்பாத்திரம் காணப்படுமோ அவன் மட்டும் அடிமையாகட்டும் – மற்றவர்கள்

போகலாம்.

சோதனை நடந்தது. பென்யமீன் சாக்கிலே அந்தப்பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

அதிர்ச்சியினாலும், துயரத்தாலும் தங்கள் உடைகளை அவர்கள் கிழித்துக்கொண்டு மீண்டும் என்னிடம் திரும்பிவந்தனர்.

**காட்சி மூன்று**

அன்று நான் என் வீட்டிலேயே அவர்களுக்காகக் காத்திருந்தேன். பதினோரு பேரும் துயரத்தோடு வந்து என் முன்பாகத் தரையிலே விழுந்தனர்.

நான் கடுமையாகப் பேசினேன்: "என்ன காரியம் செய்தீர்கள்? என்னைப் போல் இருக்கும் மனிதனால் இதை (இந்தத் திருட்டு வேலையைக்) கண்டுபிடிக்க முடியாதா?

யூதா மட்டும் பதில் சொன்னார்: "ஆண்டவனே, நாங்கள் என்ன சொல்லுவோம். என்னத்தைப் பேசுவோம். எதினால் எங்கள் நீதியை விளங்கப்பண்ணுவோம். உமது அடியாரின் அக்கிரமத்தை தேவனே விளங்கப்பண்ணினார் (கண்டுபிடித்திருக்கிறார்) . நாங்கள் யாவரும் இனிமேல் உங்களுக்கு அடிமைகள்."

நான் சொன்னேன்: யாரிடம் பாத்திரம் காணப்பட்டதோ, அவன் மட்டும் (அதாவது பென்யமீன் மட்டும்) எனக்கு அடிமையாயிருக்கட்டும். நீங்கள் யாவரும் சமாதானமாய் உங்கள் தந்தையிடம் செல்லுங்கள். யூதா மீண்டும் கதறிப் பேசினார்.

சென்றமுறை நாங்கள் வந்தபோது நீங்கள் விசாரித்ததினாலே, எங்கள் தந்தையைப்பற்றி, இந்த இளைய பென்யமீனைப் பற்றிக் கூறினோம். நீங்களும் அவனைக் கண்டிப்பாக அழைத்து வரச்சொன்னீர்கள். எங்கள் தகப்பனாருக்கு அவனை அனுப்ப மனதே இல்லை. முதிர்வயதில் பிறந்த அவன் அண்ணன் காணாமல் போனான்–இவனுக்கும் மோசம் வந்தால் நான் துயரத்தோடு இறந்துவிடுவேன் என்றார். அவருடைய உயிரும்–இவன் உயிரும் இணைந்திருக்கின்றன. ஆகவே, அவனுக்குப்பதிலாக நான் அடிமையாகிறேன். அவனை மற்றவர்களோடு அனுப்பி விடுங்கள்.

கண்ணீரோடு யூதா தொடர்ந்து கதறினார்: இளையவனான பென்யமீன் இல்லாமல் நாங்கள் எப்படி தகப்பனிடம் செல்வோம். போனால் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை எப்படிப் பார்ப்போம்!

யூதாவின் வார்த்தைகளில் வந்த "தேவன் எங்கள் அக்கிரமத்தை விளங்கப்பண்ணினார்" என்ற சொற்றொடர் "எதை நாம் விதைக்கிறோமோ அதையே அறுப்போம்" என்ற பழமொழியை எனக்கு நினைவு படுத்தியது. பல ஆண்டுகளுக்கு முன்னர் என்னை இஸ்மவேலருக்கு விற்று அடிமையாக்கக்கூறியவர் இந்த யூதா தான்! (ஆதி 37:26-28). இன்று அந்த யூதா எனக்கு அடிமையாகிறேன் என்று கூறுகிறார்.

என் விளையாட்டு நாடகம் தொடர்கிறது.

*****

**கனவுகள் தொடரும்...**

# துதித்து மன்றாடுவோம்

ஞாயிறு

## தமிழ்நாடு

**கள்ளக்குறிச்சி மாவட்டம்**
**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெள்ளிமலை, கென்டிக்கல், ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தியை ஆர்வமாகக் கேட்ட விஜயகுமார், வேல்முருகன், உமா, சந்தியா, சதீஷ் , அன்பரசன், ரஞ்சினி, சத்யா, சந்தோஷ், பிச்சன், திருப்பதி, முருகன் ஆகியோருக்காக, திரைப்பட ஊழியத்தின் மூலமாக நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, கோவிந்தராஜுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள, கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளியில் கலந்து கொண்ட சிறுவர்களின் இரட்சிப்பிற்காக, வாலிபர்கள் ஊழியத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்க ஜெபிப்போம்.

**கடலூர் மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, பொன்னேரி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட தீபா, மனோகரன், ராணி, அஸ்வின், பரமசிவம், வளர்மதி, ராஜா, மங்கையர்க்கரசி, சத்யராஜ், கலா, சின்னகண்ணன், சித்ரா, வைஷ்ணவி, தீனா, குணா, வளர்மதி, வைஷ்ணவி, ஜனா, குணா, யோகினி, பரமசிவம், ரித்திகாஶ்ரீ, சுவாதி ஆகியோருக்காகத் துதிப்போம். வீரமணி திருமுழுக்கு எடுக்க ஒப்புக் கொடுத்ததற்காக, ஏனோக்கு, முத்தழகி, மோனிஷா, ஆகாஷ், மணி மோசஸ் ஆகியோர் சிறுவர் ஊழியத்தில் ஈடுபடுவதற்காகத் துதிப்போம். பரமசிவம் (கழுத்தில் அறுவை சிகிச்சை, காலில் முடக்கு வியாதி நிறைவான சுகம் பெற, ராஜாவுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க– இரட்சிக்கப்பட– மதுப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, அருகேரி, வடகரை, மருவத்தூர், தொளார், பொன்னேரி, கொத்தட்டை ஆகிய கிராமங்களில் சிறுவர் ஊழியம் நடைபெற திறந்த வாசல் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. V.சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, சின்ன கொசப்பள்ளம் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தியை ஆர்வமாகக் கேட்ட செல்வா, ஜீவா, ராமசாமி, அனுசுயா, வசந்த், பவினா, ரித்திகா, மகாலட்சுமி ஆகியோருக்காகத் துதிப்போம். ராமசாமிக்கு நிறைவான சுகம் கிடைக்க, சௌமியாவின் தந்தை குடல் இறக்க அறுவை சிகிச்சையிலிருந்து நிறைவான சுகம் பெற, அனுசுயா, ராமசாமி ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**நாமக்கல் மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. S. சாமுவேல்**
**திருமதி. ரோகிணி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மணியன்கால்பட்டி, வண்டி கேட் ஆகிய கிராமங்களுக்காக. தேவி, முத்துலட்சுமி, வினோத், விஜய், ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, அஜித் புதிதாக வியாபாரம் ஆரம்பித்ததற்காக, வினிதா கல்லூரி கல்விக் கட்டணம் கட்டப்பட்டதற்காக, பார்த்திபன், நதியா ஆகியோர் திருமுழுக்கு எடுக்க ஒப்புக்கொடுத்ததற்காகத் துதிப்போம். ராமு

குடும்பமாக ஆராதனையில் பங்கு பெற, விஜய், வினோத் ஆகியோரின் தொழில் ஆசீர்வதிக்கப்பட, சரசு, நதியா ( பக்கவாத நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஈரோடு மாவட்டம்**

**அருட்பணியாளர்:**

**திரு.G.தனம் யோகராஜ் – திருமதி.டான்சி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரடிப்பட்டியூருக்காக, நற்செய்தியை ஆர்வமாகக் கேட்ட ஜெயந்திரன், துர்கா, கவிப்பிரியா, சிவராஜ், ஈஸ்வரி ஆகியோர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதற்காக, கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளியில் 100 பிள்ளைகள் பங்குபெற்றதற்காகத் துதிப்போம். சிவராஜ் குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட, பிரதிபா விரைவில் திருமுழுக்கு பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. அதிசய அமலன் திருமதி. ஆனந்தி விமலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆண்டிப்பாளையம், செட்டிப்பாளையம் ஆகிய கிராமங்களுக்காக, செல்லாயாள் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, ஈஸ்வரி விசுவாசத்தில் வளருவதற்காக, கலைவாணி, மோனிஷா, பூவிகா ஆகியோர் CVG இல் ஆசிரியர்களாக ஊழியம் செய்ததற்காகத் துதிப்போம். ஈஸ்வரி, தீபா ஆகியோரின் கல்லூரி கட்டணத் தேவைகள் சந்திக்கப்பட, மாரப்பன், குப்பாயாள், மருதாசலம், ராஜன், சுரேஷ், கேசவமூர்த்தி ஆகியோர் குடும்பமாக ஜெபத்தில் பங்கு பெற, சண்முகம், வெண்ணிலா, லட்சுமி, பரிமளா, சுப்பிரமணி ஆகியோர் விசுவாசத்தில் வளர–கடனிலிருந்து விடுதலை பெற, சபையில் உள்ள வாலிபர்கள் உற்சாகத்தோடு நற்செய்தி அறிவிக்க பெற ஜெபிப்போம்.

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. லூர்டஸ் திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பில்சின்னம்பளையம், குள்ளேகவுண்டனூர், உப்பிலியனூர், பூவலப்பருத்தி, சமத்தூர், கோட்டூர், அங்கலகுறிச்சி ஆகிய கிராமங்களுக்காக. கலா, பாண்டி, நாகராஜன், சாந்தி, ஜெயா, சிவன் ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, கிருபாலினுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். வாலிபர்கள் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் தொடர்ந்து சபைக்கு வர. நான்சிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, லட்சுமியின் மகளுக்கு கண் பார்வை கிடைக்க, கிதியோன் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட, சபை மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.எபிநேசர் உவைட் திருமதி. மேரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தொண்டாமுத்தூர் கிராமத்திற்காக, அற்புதராஜ், லட்சுமி, சாமுவேல் ஆகியோருடைய வீடுகளில் வேதபாட வகுப்பு நடைபெறுவதற்காகத் துதிப்போம். தொண்டாமுத்தூரில் ஜெப குழுக்கள் தொடர்ந்து நடைபெற, ஏஞ்சல், சித்ரா, ராஜன் குடும்பங்கள் விசுவாசத்தில் வளர, ஏஞ்சல் மகன் நிறைவான சுகம் பெற, புதிதாக சந்திக்கப்பட்ட சௌந்தர்யா இரட்சிக்கப்பட, சிவா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற– குடும்பத்தில் சமாதானம் கிடைக்க– இரட்சிக்கப்பட, ரம்யாவிற்கு ஏற்ற காலத்தில் சுகப்பிரசவம் கிடைக்க, சாமுவேலுக்கு கல்லூரியில் படிக்க இடம் கிடைக்க, பிரேம் நல்ல வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன் திருமதி. செல்லாண்டீஸ்வரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாட்டுக்கல்பாளையம், கொள்ளுப்பாளையம், தாழாபட்டி, விரல்பட்டி

ஆகிய கிராமங்களுக்காக, ரஞ்சித்துக்கு நல்ல வேலை கிடைத்ததற்காக, ஜெசிகா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஜான் குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலை பெற, பிரியாவின் தந்தை இரட்சிக்கப்பட, நந்தகுமார், தாமரை, மஞ்சுளா ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. R. ஸ்டீபன் செல்வகுமார்**
**திருமதி. கரோலின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வாழைகொம்பு கிராமத்திற்காக, சுவேதாவுக்கு அரசு வேலை கிடைத்ததற்காக, ஏழு வருடங்கள் கழித்து ரீட்டாவுக்கு கிடைத்த ஆண் குழந்தைக்காக, தீனா ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்ததற்காக, சீடத்துவ பயிற்சி நாகூரில் ஆரம்பிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். புதிதாக சந்திக்கப்பட்ட சக்தி விசுவாசத்தில் வளர, ராஜ்குமார் குடும்பமாக ஆலயத்திற்கு வர, மந்திரி, சாமிக்கண்ணு ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ஆலயம் கட்ட சொந்தமாக இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**

**அருட்பணியாளர்: திரு. S. பால்ராஜ்**
**திருமதி. மரியாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குருணைக்கல்பட்டி கிராமத்திற்காக, மாயவன் இடுப்பு வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, துரை நுரையீரல்–காசநோய் ஆகியவற்றிலிருந்து சுகம் பெற்றதற்காக, பெண்கள் கூடுகையில் ஆர்வமாகக் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். தமிழ்ச்செல்வி கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, சந்துரு, மாயகிருஷ்ணன், தியாகு, பகவதி, சரசுவதி, செல்லமுத்து, நாகாத்தாள் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**
**திருமதி. ஜெபரூபி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாப்பாவலசு, சுள்ளிபெருக்கிப்பாளையம் ஆகிய கிராமங்களுக்காக, 3 ஆண்டுகளுக்குப் பிறகு ருக்காத்தாள் மீண்டும் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, தமிழரசிக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். கருப்பையா சிறுநீரக நோயிலிருந்து சுகம் பெற, சண்முகம் இரத்த அழுத்த நோயிலிருந்து சுகம் பெற, பாப்பாவலசு சபையில் ஒருமனம் ஐக்கியம் உண்டாக ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு. சாலமோன்ராஜ்**
**திருமதி. ஜெயக்கொடி**

செல்வி (இருதய நோய்), அபிநிசா (கணைய நோய்) ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காக, ராணி, புருசோத்தமன், சாவித்திரி, திருமலை, சுரேஷ், பிரவீன் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காக, வேலுமணி, ஜெபமணி, ஈஸ்வரி, லட்சுமி, ரங்கம்மாள் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, லட்சுமி கணவரோடு சேர்ந்து வாழ்வதற்காகத் துதிப்போம். ஆறுமுகம், சின்னம்மாள், செல்வி, கன்னியம்மாள் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ஹரிஹரன், அமுதா ஆகியோருக்கு கால் அறுவை சிகிச்சை சிறப்பானமுறையில் நடைபெற, மகுடீஸ்வரி, மோனிஷா, ஜெயந்தி, சித்ரா, அபிராமி ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, செல்லம்மாள், காளியம்மாள், கோபாலகிருஷ்ணன் ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ஊழியரின் மனைவி–ஊழியர் ஆகியோருக்கு முதுகுதண்டுவட நோயிலிருந்து நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**திருச்சி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. S.ஜெயக்குமார்**
**திருமதி. மரிய செல்வம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உப்பிலியாபுரம், வெங்கடாசலபுரம், சிக்கந்தப்பூர்பாளையம், சிக்கந்தப்பூர்சோபனபுரம், கொட்டம்பட்டி, மங்கபட்டி, வைரசெட்டிபாளையம், மாரடி,

ஒக்கரை, புதுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட பாப்பாத்தி, சதீஷ், கணேசன், செல்வகணபதி, அமர்ஜோதி, செல்லம்மாள், கண்ணன், அமுதா, முத்துச்செல்வி, அறிவழகன், செல்லையா, கண்ணகி, குருவம்மாள், நாகஜோதி, வெள்ளைச்சாமி, பாரிவேந்தர், நல்லம்மாள், வெற்றிவேல், சில்வர்யாணி, குருஸ், அன்னம்மாள், செல்வராஜ், லோகநாதன், செந்தில் ராஜா, மணிமாறன், ரமேஷ் ஆகியோருக்காக, ஜோன்ஸ் பிளஸ்ஸிக்கு தேவன் தந்த ஆண் குழந்தைக்காக, நித்தியாவிற்கு பதிவு துறையில் வேலை கிடைத்ததற்காக, நிவாஸ்யா மற்றும் பிஸ்கல்லா ஆகியோரின் திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காகத் துதிப்போம். கணவனை இழந்த மகேசுக்கு தேவன் ஆறுதல் தர–கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, அருட்பணியாளரின் வீடு கட்டுமானப் பணி விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.B. தினேஷ் – திருமதி. எமீமா பியூலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மலையடிவாரம், நத்தமாடிபட்டி, தெற்கு தெரு ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கிஷோர், சரண்யா, சந்தியா, ராஜேஷ், மணிகண்டன், கார்த்திக் பாண்டி, ராதா, மாணிக்கம், பத்மா, கீர்த்திகா மற்றும் வட இந்தியர்களான பிலோ, ஆகாஷ், சோனு, ஷாஷா, நிஷா, நேகா, முன்னோ, கீரு ஆகியோருக்காக கீழக்குறிச்சியில் திரைப்பட ஊழியம் நடைபெற்றதற்காக, சங்கர் மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## திங்கள்

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்செண்ட்**
**திருமதி. பவுலின் கிரேஸ்**

வாகைக்குளம் கிராமத்தில் கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளி மூலமாக 75 சிறுவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட 75 சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள், செல்லம்மாள், சிவனம்மாள், சரசு, பிரியா, கருப்பாயி. சர்மிளா, நித்தியா, செல்லம்மாள், பாண்டீஸ்வரி குடும்பத்தினர், முத்துப்பேச்சி, சரண்யா, சரசு, ரேணுகா குடும்பத்தினர், காசிமாயன் குடும்பத்தினர், செல்லபாண்டி குடும்பத்தினர், பால்சாமி குடும்பத்தினர், கலைசெல்வி குடும்பத்தினர், ஆரியமாலா கணவர், லட்சுமி குடும்பத்தினர், பேச்சி, சிவனம்மாள், மல்லிகா குடும்பத்தினர், செல்லம்மாள் மகள் மாயாக்காள், ஸ்ரீமதி, நித்தியா, மல்லிகா, சிவனம்மாள் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. பிரவீன்குமார்**
**திருமதி. மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அரசப்பட்டி, சமத்துவபுரம், காமாட்சிபுரம், குளத்துவாய்ப்பட்டி, வெயிலுகந்தபுரம், வலையன்குளம் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட சந்தியா, மாரிமுத்து, நடராஜன், திவ்யா, மீனா, மோகன், சக்தி ஆகியோர் இரட்சிக்கப்பட, கண்ணன் விசுவாசத்தில் வளர, பெரியகருப்பு பனை மரத்தில் இருந்து கீழே விழுந்ததினால் கையில் ஏற்பட்ட எலும்பு முறிவிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. M. கார்த்தி**
**திருமதி. ரீஜா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, பூசலாபுரம், பரமன்பட்டி, புதுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தியை ஆர்வமாய் கேட்ட விஜயா, ராமத்தாயி, பொம்மியம்மா ஆகியோருக்காக, ஜமுலாபுரத்தில் ஜெபக்கூடுகை நடைபெறுவதற்காக, சிறுவர் ஊழியம் மூன்று கிராமத்தில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். வீடு கட்டுமானப்பணி தடையில்லாமல் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. A. கந்தசாமி**
**திருமதி. முருகம்மாள்**

நற்செய்தி பணி, வீடு சந்திப்புகள் செய்யப்பட்ட இந்திராகாலனி, பள்ளக்காப்பட்டி, கீழஉரப்பனூர், வாகைகுளம் பிரிவு, திருமங்கலம் ஆகிய பகுதிகளுக்காக, பாப்பாத்தி அம்மாள் வீடு கட்டுவதற்கு தேவையான மின்சாரம் கிடைத்ததற்காக, டெய்சி விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ராஜபாண்டி, பச்சைக்கிளி ஆகியோர் இரட்சிக்கப்பட, சுவாதி, இனியா, கலாவதி ஆகியோர் இரட்சிக்கப்பட, கோடை விடுமுறை சிறுவர் வேதாகம ஊழியங்களுக்காக, ஊழியரின் மனைவி பிள்ளைகளுக்காக, ஊழியருக்கு வீடு-ஆலயம் மீண்டும் கட்டப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. P. சத்தியநாதன்**
**திருமதி. கிறிஸ்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குச்சம்பட்டி, வெங்கடாசலபுரம், ரெட்ரபட்டி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட வாணி, ஈஸ்வரி, சின்னம்மாள், சீதாலெட்சுமி, மாரியம்மாள், விஜயலட்சுமி, பாண்டிலெட்சுமி, சந்திரா, பேச்சியம்மாள், பஞ்சு, பத்மா, விஜி பிரபா, முனியம்மாள், இந்திரா, ஜோதி, அன்னலட்சுமி ஆகியோருக்காக, சரண்யாவுக்கு சுகப்பிரசவத்தில் பெண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். பிரதீபா நரம்பு தளர்ச்சி நோயிலிருந்து சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :திரு. P. ராஜா**
**திருமதி. அன்னாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரடிக்கல், குன்னணம்பட்டி, மொட்டைப்பாறை ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தியை ஆர்வமாகக் கேட்ட வைராத்தாள், நல்ல மாய தேவர், சின்னசாமி, விஷால் ஆகியோருக்காக, ராசு, முருகன், போஸ், ரேவதி, சரண்யா, நிஷாந்தினி, ஜெயராணி, கற்பகம் ஆகியோருக்காக, சுகந்தி குடும்பம் ஒன்று சேர்ந்ததற்காக, ஆனந்தியின் வாழ்வில் தேவனை ஆராதிக்க இருந்த தடைகளை தேவன் நீக்கினதற்காக, வைராத்தாள் தொடர்ந்து ஆலயத்திற்கு வருவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ஆனந்திக்கு வேலை கிடைக்க, ஜான்சன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. காளிமுத்து**
**திருமதி. குமுதா**

நற்செய்திப் பணி செய்யப்பட்ட பெருங்காமநல்லூர், சிவனாதபுரம், ஓணாப்பட்டி, காளப்பன்பட்டி, அழகுரெட்டிபட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட லட்சுமி, தங்கம், கெங்கம்மா, பஞ்சவர்ணம், மொக்கம்மா, துர்கா, பாப்பு, வனிதா, ஜெயராமன், சோங்கம்மா ஆகியோருக்காக, பவுன்ராஜ் வீட்டில் நடைபெற்ற ஜெபக்கூட்டத்திற்காக, இம்மாதம் ஆலய ஆராதனையில் புதிதாக கலந்து கொண்ட முருகனுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, முருகன், தங்கம் ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, லட்சுமி சபைக்கு வர, அழகுரெட்டிபட்டியில் கிளை சபை ஏற்படுத்தப்பட, முருகேஸ்வரிக்கு அடிக்கடி ஏற்படும் பலவீனத்திலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

கருவேப்பிலை, கே.ஜே காலனி, ஜோதிமாணிக்கம், பிரவியம்பட்டி, கொடிக்குளம், கொடிக்குளம் காலனி ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ஊழியர் மனைவிக்கு சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை கிடைத்ததற்காக. பொதுத்தேர்வு எழுதினவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றதற்காக, தேவி தீராத வயிற்று

வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக. ரீனாவின் தொலைந்து போன மோதிரம் திரும்ப கிடைத்ததற்காக, கோடை விடுமுறை சிறுவர் ஊழியம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட புதிய ஆத்துமாக்கள் சபைக்கு வர, சபை விசுவாசிகள் பலப்பட, சீஷர்கள் உருவாக, பாக்கியவதி நரம்பு நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. M. அகஸ்டின்**
**திருமதி. ஜோஸ்பின்**

மணல்பட்டி, காந்திநகர், சங்கம்பட்டி, கருமாத்தூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்காக, 10 ஆண்டுகளாக இருந்த இடுப்பு வேதனையிலிருந்து எஸ்தர் சுகம் பெற்றதற்காக, கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளி சிறப்பாக நடைபெற்றதற்காக, மாற்கு கால் முறிவிலிருந்து சுகம் பெற்றதற்காக, அங்கம்மாளின் மருமகள் புதிதாக ஆலயத்துக்கு வந்ததற்காக,பேச்சிக்கு கிடைத்த சுகத்திற்காக, ஐஸ்வர்யா வீடு கட்டி முடிக்க தேவன் உதவி செய்ததற்காக, கஜேந்திரன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றததற்காகத் துதிப்போம். அந்தோணிராஜ் தொடர்ந்து ஆலயம் வர, கீர்த்தி, கிளாடிஸ், கயல் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சித்ரா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, சபை மக்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர, புதுக்கோட்டை சபைக்கு ஒரு பி ஏ சிஸ்டம் வாங்கப்பட, மதி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ஜெயராணி பெற்றோருக்கு கால் வலியிலிருந்து சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லிங்கப்பநாயக்கனூர், சுளிஒச்சான்பட்டி, கொப்பிலிப்பட்டி, அப்பணம்பட்டி, திம்மநத்தம் ஆகிய பகுதிகளுக்காக, நற்செய்தியை ஆர்வமாகக் கேட்ட மகிழம்மா, ரேவதி, ராணி, ஒச்சம்மா, மாணிக்கம் ஆகியோருக்காக, புதிதாக சபைக்கு வந்த சண்முகத்தாய்க்காக, சௌந்தரபாண்டியன், மொக்கமாயன், காசம்மா ஆகியோர் சுகம் பெற்றதற்காக, ரமேஷ் மீண்டும் குடும்பத்தோடு சேர்ந்து வாழ்வதற்காகத் துதிப்போம். சண்முகத்தாய், அந்தோணியம்மாள், அண்ணாமலை, முத்து ஆகியோர் மற்றவர்களிடம் கொடுத்த பணம் திரும்ப கிடைக்க, முருகனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, வில்லியம்–சீலா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. பிலிப் முருகன்**

சாம்–புவனேஸ்வரி தம்பதியினருக்கு பெண் குழந்தை கிடைத்ததற்காக, ஆகாஷ்–பிரவீனா ஆகியோரின் திருமணம் நன்றாக நடைபெற்றதற்காகத் துதிப்போம். குளத்துப்பட்டியில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, வாலிபர்கள் இரட்சிக்கப்பட, கொடியம்மாள் வீடு கட்டி முடிக்கப் பணத் தேவைகள் சந்திக்கப்பட, ராமசாமி ஐயா விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அயோத்திபட்டி, வகுரணி ஆகிய கிராமங்களுக்காக, மீனாவுக்கு அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காக, ஆலயம் மங்களப்படைப்பு செய்யப்பட்டதற்காக, கீர்த்தனா குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, அனந்தகுமார் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். கர்ணன், காந்தி ராஜன், அருண், அர்ச்சனாதேவி ஆகியோர் இரட்சிக்கப்பட, ரவி, கனகராஜ் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, சூர்யா, சுருதி, ரவி, அஜித், சிநேகா ஆகியோர் விசுவாசத்தில் வளர, ஜெயலட்சுமி, சரஸ்வதி, முத்துப்பேச்சி, சாந்தா ஆகியோர் மீண்டும்

ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. A. பால்ராஜ்**
**திருமதி. ஏஞ்சல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கூத்தியார்குண்டு, கப்பலூர், கருவேலம்பட்டி, காந்திநகர், இலங்கை அகதிகள் முகாம், தோப்பூர், நேதாஜி நகர் ஆகிய கிராமங்களுக்காக, ப்ரீத்திவ் குடும்பமாக மீண்டும் ஆலயம் வந்ததற்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ராஜ்குமார், விஜயா, லீலா, வினித்தா, இளவரசன், கார்த்தி, பாலு, சேகர், சௌந்தர்ராஜ், நிர்மலா, காமாட்சி கிரண், ஆகியோருக்காக, லட்சுமி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். சௌந்தர்ராஜ் (வலிப்பு நோய்), நிர்மலா (இருதய நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, பாலு குடும்பமாக இரட்சிக்கப்பட–தொழில் வளர்ச்சி அடைய, சபையில் சீடர்கள் உருவாக, வினிதாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க– குடும்பமாக இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. G. ஜெகன்**
**திருமதி. திவ்யா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உச்சபட்டி, தர்மத்துப்பட்டி, இந்திரா நகர், சிவன் நகர், முனியாண்டிபுரம், பொம்மையாபுரம் ஆகிய பகுதிகளுக்காக, நற்செய்தி கேட்ட மோகன், செல்வராஜ், தங்கதுரை, இசக்கிமுத்து, பிச்சையம்மாள், ராஜேஸ்வரி, நாகலட்சுமி, செல்வம், பாக்கியலட்சுமி, பசுபதி, கணேசன், வேல்முருகன், அக்ஷயா, திலகவதி ஆகியோருக்காக, ராமன் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, பாண்டிச்செல்வி (சிறுநீரகக்கல் அடைப்பு நோய்), ராஜசேகர் (பக்கவாதம் மற்றும் நுரையீரல் தொற்று நோய்), சூசன்னாவின் தாயார் ஆகியோர் சுகம் பெற்றதற்காக, தவமணி, தங்க ராஜா ஆகியோர் புற்றுநோயிலிருந்து சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். தங்கராஜ், மோகன், செல்வராஜ், தங்கதுரை, இசக்கிமுத்து, பிச்சையம்மாள், ராஜேஸ்வரி, நாகலட்சுமி, செல்வம், பாக்கியலட்சுமி, பசுபதி, கணேசன், வேல்முருகன், அக்ஷயா, திலகவதி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## செவ்வாய்

**அருட்பணியாளர் :**
**திரு. ஜஸ்டின் சாமுவேல் – திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லாலா சத்திரம், அம்பேத்கர் நகர், சம்பக்குடி, விராட்டிப்பத்து, ஞானம் நகர், காந்தி நகர் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட அஸ்வின், முகிலேஸ், சித்திரைச் செல்வி, காவியா, லட்சுமி, தேன்மொழி, சர்மிளா, முத்துக்குமரன், அப்சரா ஆகியோருக்காக, கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளியில் கலந்து கொண்ட 50 சிறுபிள்ளைகளுக்காக, வாணி, ரேஷ்மா, ராஜ்பிரியன் ஆகியோர் தொடர்ந்து விசுவாசத்தில் வளர்ந்து வருவதற்காகத் துதிப்போம். யாஷினி (13 வயது– லூபஸ்–வெள்ளை அணுக்களைப் பாதிக்கும் நோய்) நிறைவான சுகம் பெற, அருண், செல்வா, ரம்யா ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்க, முத்துக்குமரன்– அப்சரா – தம்பதியினர் குடும்பம் இரட்சிக்கப்பட– கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற, சந்தியா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் : திரு. வயநாட்டுமுத்து**
**திருமதி. கனியமுது**

சாமுவேலுக்கு தேவன் அற்புதமாக சுகம் கொடுத்ததற்காகத் துதிப்போம். கனகா, முத்துலட்சுமி, பாண்டீஸ்வரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சாந்தகுமார்,சாமுவேல், சீதா ஆகியோருக்கு விரைவில் திருமணம் நடைபெற– நிரந்தரமான வேலை கிடைக்க, பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் அடுத்த வகுப்புகளுக்கு செல்வதற்குப் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட, ஜெயா, சலோமி, சசி ஆகியோர் தொடர்ந்து ஆலயம் வர, ஜெசிந்தாவுக்கு ஏற்ற

காலத்தில் சுகப் பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. J. ஜெயகுமார்**
**திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பல்கலை நகர், முத்துப்பட்டி, மணப்பட்டி, அடைக்கம்பட்டி, வடபழஞ்சி, வெள்ளைப் பாறைப்பட்டி, தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காக, விசுவாசிகள் ஊழியருடன் இணைந்து ஊழியம் செய்வதற்காக, திருமுழுக்கு எடுக்க ஒப்புக் கொடுத்த முத்துராமன், சாந்தி, கௌசி, மீனா, பேரரசு, பானு ஆகியோருக்காகத் துதிப்போம். கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளியின் மூலம் சந்திக்கப்பட்ட சிறுவர்கள் ஓய்வுநாள் பள்ளியில் கலந்து கொள்ள, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. P. தேவதாஸ்**
**திருமதி. பிலோமினா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ராய வேலூர், பாலக்கோம்பை, கென்னடி நகர், தெப்பம்பட்டி, வண்டியூர், கொழிஞ்சிப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட சொக்கலிங்கம், வீரவேல், சின்னம்மாள், பேரின்பம், பவித்ரா, சூரியன், சக்திவேல், மணி, வேல்முருகன், பார்த்தசாரதி, மலர்விழி, பூமா, குமரவேல், சக்தி, வேலுத்தாய், தங்கராஜ், சின்னம்மா, லட்சுமி, ஆண்டி, ராமர் ஆகியோருக்காக, சபைக்குப் புதிதாக வருகிற வீரவேல், சின்னம்மாள், ரித்விக் ஆகியோருக்காகத் துதிப்போம். அழகாபுரி, ராஜக்கல்பட்டி, அவரம்பட்டி ஆகிய கிராமங்களில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ராயவேலூர் கிராமத்தில் தடைபட்ட ஞாயிறு மாலை ஆராதனை மீண்டும் ஆரம்பிக்கப்பட, அழகாபுரி, ராயவேலூர், பாலக்கோம்பை ஆகிய கிராமங்களில் புதிய ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட, அறுவை சிகிச்சை செய்யப்பட்ட அர்ஜுனுக்கு நிறைவான சுகம் கிடைக்க, ராமகிருஷ்ணாபுரம் பகுதியில் பின்வாங்கிய வாலிபப் பிள்ளைகள் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள, வீரவேல், சின்னம்மாள் ஆகிய குடும்பங்கள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. நாதன்**
**திருமதி. மேகலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட முத்து நாயக்கன்பட்டி, தேக்கம்பட்டி, மீனாட்சிபுரம், அடைக்கம்பட்டி, கண்டமனூர், அன்னை இந்திரா நகர், சமத்துவபுரம், பொன்னம்மாள்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட பூர்ணிமா, பாண்டியம்மாள், முருகன், இலக்கியா, புனிதவள்ளி, சிவக்குமார், பாலசுப்பிரமணியன். சத்யா, மகிஸா ஹரிகிருஷ்ணன், அன்னக்கொடி, சண்முகத்தாய், தம்பிராஜ், விஜய், முத்துராஜ், முகேஷ் ஆகியோருக்காக, சுபஸ்ரீ வயிற்று வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, விஜய்க்கு தேவன் தந்த ஆண்குழந்தைக்காகத் துதிப்போம். பாண்டியம்மாளின் கணவர் (இருதய நோய்) புனிதாவின் மாமியார் (புற்று நோய்), புவனேஷ்வரி (முடக்குவாத நோய்), தம்பிராஜ் (மனஅழுத்த நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, சௌந்தர்யாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.J.உலகநாதன்–திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வீடுகட்டி ஆகிய கிராமங்களுக்காக, சவுரிராஜன் குடும்பமாக இரட்சிக்கப்பட்டதற்காக, ஜெயா குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, தவமணியின் கணவருக்கு வேலை கிடைத்ததற்காக, ஸ்ரீராம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். சோனியாவுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ராஜேந்திரன் விஜயலட்சுமி ஜெயசித்ரா ஜெயக்குமார், மகேஸ்வரி

குடும்பம், பிரித்திவிராஜ், அறிவழகன் ஆகியோர் இரட்சிக்கப்பட, சுசிலாவுக்கு வேலை கிடைக்க, சில்வியாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சிவா இரட்சிக்கப்பட- குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற- திருமணம் நடைபெற, ஆண்டவர் ஆட்சி அம்மை நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தண்டியனேந்தல், தோணுகால், புளியம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, பேச்சியம்மாள கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக, குருசாமிக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சுகன்யா கணவர், குருவம்மா கணவர் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, செல்லப்பனுக்கு அரசாங்க வீடு கிடைக்க ஜெபிப்போம்.

**தென்காசி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. J. பவுல்ராஜ்**
**திருமதி. எமீமாள்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட திருமலாபுரம், சிவகாமியாபுரம், தடியாபுரம், வடக்கு அச்சம் பட்டி, மகேந்திரவாடி, புதுக்குளம் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தியை ஆர்வமாக கேட்ட பாண்டி, லட்சுமி, பாலசுப்பிரமணி, வள்ளிதாய், பேச்சியம்மாள், மாரிச்சாமி, விஜயா, முத்தாபரணம், கற்பகம், துரைப்பாண்டி, விஜயா, பிரியா, அன்புராஜ், மாரீஸ்வரன், பொன்னி, பால்பாண்டி, கருப்பசாமி, செல்வி, மாலினி, வசந்த் ஆகியோருக்காக, சீனியம்மாள்-தங்கராஜ், செல்வி-செந்தில், ஜுலியா ஆகியோருக்கு பெண் குழந்தை கிடைத்ததற்காக, சரண்ராஜ் டிராக்டர் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, சங்கரேஸ்வரிக்கு திருமணம் நடைபெற்றதற்காக, சூர்யாவுக்கு குடல்வால்வு அறுவை சிகிச்சை நடைபெற்று-சுகம் பெற்றதற்காக, சண்முகத்தாய் ஆலய ஆராதனையில் கலந்து கொள்கிறதற்காகத் துதிப்போம். விவேக்பிரபு, திவ்யா, பிரியதர்ஷினி, இளவரசி, எஸ்தர் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க-விரைவில் திருமணம் நடைபெற, அஜித்-முனியம்மாள் தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, பேச்சியம்மாள் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை அடைய, தனசீலனின் வீடு கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட, மதியரசனுக்கு வேலை கிடைக்க, தேவராஜ், தேவதாஸ் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற- இரட்சிக்கப்பட, விஜயாவுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**விழுப்புரம் மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு.D. தங்கராஜ்**
**திருமதி. எஸ்தர் பிரியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மடப்பட்டு, அரும்பட்டு, பருகம்பட்டு, இருந்தை, மேட்டத்தூர், செம்மணந்தல் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட பார்வதி, பிரவின், ராமலிங்கம், பூவன், மாலா, பாஸ்காமேரி, மணிகண்டன், ஹரீஸ், பிரசாந்த், சாரதா,பிருந்தா, மாரிமுத்து, பாலமுருகன், மல்லிகா, காந்தலவாடி, பிரவின் குமார், சூசன்னா, சந்தியா ஆகியோருக்காக, விக்னேஷ் (குடல் புண்), அமலேஷ், அம்பிகா ஆகியோர் சுகம் பெற்றதற்காக, ராஜா-மெர்சி குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காகத் துதிப்போம். பாலகிருஷ்ணன் குடிப்பழக்கம்-கடன் பிரச்சனை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற, பிரபா-மகேந்திரன் ஆகியோர் ஒரே இடத்தில் சேர்ந்து வாழ, பென்சிகா இரட்சிக்கப்பட, அருள் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பியூலா எப்சிபாவின் தொழில் ஆசிர்வதிக்கப்பட, நடராஜ், மணி ஆகியோரின் இடங்கள் விற்பனை செய்யப்பட ஜெபிப்போம்.

**தரிசனம் பரப்புவோர்**

புதிய தாங்குவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர் (தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), அருள்திரு. பீட்டர் (ஜெப ஒருங்கிணைப்பாளர்), ஊழியர்கள்: திரு.R.பாலசுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல்ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்செண்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. மைக்கேல், திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மரியானந்தன் மாற்கு, திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனசு மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.J.P. ரவிக்குமார், திருமதி. பியூலா திருவாசகி, திருமதி. ஜான்சி டயானா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வட இந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஜெபிப்போம்.

## மொழிபெயர்ப்புப் பணி

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.கசியா மாத்லாம், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, நடைபெற்றுவரும் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பு விரைவில் முடிவடைய, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்பின் ஆய்வுப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி ஆடியோ வேதாகமம், தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

**தலைமை அலுவலகம்**

அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழிநடத்துதல் மற்றும் பொதுச்சேவகரின் மணிப்பூர் மற்றும் திரிபுரா மாநில பணித்தளச் சந்திப்புக்காக, பொதுச்சேவகர் அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன், துணைப் பொதுச்சேவகர் திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A. ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், செல்வி. S.செஹானா ஜெசுனி, திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக, நடைபெறவிருக்கும் பொதுக்குழுக் கூட்டங்களுக்காக, நிதியாண்டு தணிக்கை நல்லமுறையில் நடைபெற ஜெபிப்போம்.

**புதன்**

வளரும் விண்ணரசு

ஒவ்வொரு மாதமும் இதழ் தடையின்றி வெளியிடப்படுவதற்காக– தேவைகள் சந்திக்கப்படுவதற்காகத் துதிப்போம். இதழில் கட்டுரை எழுதுபவர்களுக்காக, அவர்களுடைய குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட, இதழிலுள்ள ஒவ்வொரு பகுதியும் வாசிக்கிறவர்களுக்கு பயனுள்ளதாக இருக்க, ஆசிரியர் குழுவினரின் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

**நிறுவனர்கள்**

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி

ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.

**நிர்வாகம்**

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்டின், Dr.S. அருண், திரு. K. ஜான்சன், திரு. P. கோபாலகிருஷ்ணன், Dr. தினகரன் ரிச்சர்ட், திரு. J.E. பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி**

இறையியல் கல்வி பயிலும் 15 பேருக்காகத் துதிப்போம். சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜனி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, பிரின்ஸ் ராய்சன், ரேணுகா ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்: திரு. ஓமெந்திராகுமார்**
**திருமதி. சவீத்தா குமாரி**
**திரு. தினகரன்**
**திருமதி. லீனா குமாரி கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சீயோன் நகர், பார்வதிபுரம், ஆனந்த் நகர், கோணம், கம்பிபாலம், ஆசாரிபள்ளம் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தியைக் கேட்ட ஆதர்ஷ்குமார், ராசு, ராமன், லவ்குஷ், அவ்தேஷ், கணேஷ் சாக், சிவானி, மனித்தா, சரீத்தா, மன்குஷ், நவல்குமார், சுதீர்குமார் ஆகியோருக்காக, ஜோனே சிறுநீரக நோயிலிருந்து சுகம் பெற்று வருவதற்காக, ஜாயா மின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். மாடியிலிருந்து கீழே விழுந்த ஜுலிக்கு நிறைவான சுகம் கிடைக்க, லவ்குஷ் தொழில் ஆசீர்வதிக்கப்பட, அர்பிந்த் குமார் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**மத்திய இந்தியா – மகாராஷ்டிரா**

**அருட்பணியாளர்:**
**திரு. க்யானேஷ் லால்பகதுார் தாக்குர்**

ஜுனோனா, படாம்பூர் ஆகிய இடங்களில் ஆராதனைகள் நடைபெறுவதற்காக, மாலைநேர வகுப்புகள் நடத்துவதற்கு இடம் கிடைத்ததற்காக, ரூபேஷ் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். மாலைநேர வகுப்புகள் மூலமாக சந்திக்கப்படும் மாணவர்கள் இரட்சிக்கப்பட, நல்லமுறையில் கல்வி கற்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஃபனின்ட்ரா பார்**

மரோடா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, ரவி ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. கணேஷ் முரளிதர்**

கோல்காபூரில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். சீடர்கள் உருவாக்கப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**வளரும் விண்ணரசுவுக்கு சந்தா அனுப்பி பத்திரிக்கை ஊழியம் சிறக்க உதவுங்கள்**

## வட இந்தியா

**அருட்பணியாளர்கள்:**

**திரு. சுக்ராம், திரு. ஜுகேஷ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிப்ரேல், பராண்டா, சாந்தி நகர், நாராயண்பூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சூரஷ், புல்தேர், ரமேஷ், சுக்தேவ், ரேணு, சுனித்தா, சாந்தி, சுக்ஜெயின் ஆகியோருக்காகத் துதிப்போம். துலேஷ், ரிஷிராஜ், தாலேஷ்வர், ஒகேஷ்வர் ஆகியோர் இரட்சிக்கப்பட, தாலேஷ்வர் சர்க்கரை நோய்–கண் நோய் ஆகியவற்றிலிருந்து சுகம் பெற, மோத்தி சலாம் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ராம்பொரஸ் போயாம்**
**திருமதி. சங்கீதா போயாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொங்கேரா, பூஜாவாகி, மலேச்சூர் ஆகிய கிராமங்களுக்காக, சமிஷா, சானியா ஆகியோர் பள்ளித்தேர்வில் தேர்ச்சி பெற்றதற்காகத் துதிப்போம். மனைவியை இழந்துள்ள சந்துவுக்கு தேவன் ஆறுதல் தர, மெயினு சலாம் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ரஸாய் சலாம் விபத்துக் காயத்திலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்து சலாம்**
**திருமதி. சோன்பத்தி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்காவ், குருஸ்நார், படே ஜம்ரி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட புத்திராமுக்காகத் துதிப்போம். டிக்கேஷ் (நீட்), மகேஷ்வரி–ரோஷன் (காவல் ஆய்வாளர்) ஆகியோர் தேர்வில் வெற்றி பெற, ரஸ்மான் இறையியல் கல்வியை நல்லமுறையில் கற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மங்கலு மாத்லாம்**
**திருமதி. சுசீலா மாத்லாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாட்பால், ஷியாநார், பூசுவால் ஆகிய கிராமங்களுக்காக, மங்கினி மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். ஷியாநாரில் ஆலயம் கட்டுவதற்கான தேவைகள் சந்திக்கப்பட, ஜெய்னி இரட்சிக்கப்பட, சோனு கண் எரிச்சல் நோயிலிருந்து சுகம் பெற, ஊழியர் முதுகுதண்டுவட வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. கஸியா துக்கா**
**திருமதி. ரூப்பாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாக்ரி, அமாஸாரா, கோகுடா, குடுப்பாயீ, ராஞ்தோடா, கன்கரா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ராம்பத்தி பொட்டாய், பசந்தி வட்டே, புத்ராம் வட்டே, சுனித்தா வட்டே, தஸ்ரத் சலாம் ஆகியோருக்காக, அமாஸாரா, கோகுடா, ஆத்வால் ஆகிய கிராமங்களில் ஜெபக்குழுக்கள் நடைபெறுவதற்காக, எதிர்ப்புகளால் குடுப்பாயீ கிராமத்தை விட்டு வெளியேறிய கெசியா வட்டே மீண்டும் திரும்பி வந்ததற்காகத் துதிப்போம். ராம்பத்தி (விபத்துக் காயங்கள்), சுனித்தா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சாது துக்கா**
**திருமதி. ரசாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆம்காவ், சிப்ரேல், மஸ்பூர், தெர்தூல், தாடோநார், தாடோபால் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ரஸ்மனுக்காக, ராம்தாய், மகரூ ஆகியோர் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, மான்கு இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, கங்காபத்திக்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காகத் துதிப்போம். சோம்தாய்க்கு சுகப்பிரசவம் கிடைக்க, மான்கு, கங்காபத்தி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம். (வியாழன்)

**அருட்பணியாளர்: திரு. புத்சிங் வட்டே**
**திருமதி. ரெய்னி வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஓங்நார், மட்டாவண்ட், மாத்லா, ஏதேம்பால் ஆகிய

கிராமங்களுக்காகத் துதிப்போம். சுக்மி பொட்டாய் (வயிற்று வலி), காரிய பொட்டாய் (சிறுநீரக நோய்), சுக்கோ பொட்டாய் (இரத்த அழுத்தம்), சுதிரிவட்டே (சுவாச நோய்), சாத்து பொட்டாய் (காச நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, தன்சிங் பொட்டாய் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜ¯குல் சலாம்
திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாந்தாகாவ், சோனாபால், பாக்பேடா, கிதும்பேடா, சிர்பூர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ரிஸாய் பொட்டாய், ராம்சிங் கொர்ரம், ராம்நாத் ஆகியோர் கிறிஸ்துவில் வளர, பச்சினி பொட்டாய், பஜ்நாத் பொட்டாய், ஜெய்னி பொட்டாய் ஆகியோர் இரட்சிக்கப்பட, சந்தேர் சலாம் (இடுப்பு வலி), பக்கினி சலாம் (உடல் வலி) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. தஸ்ரு பொட்டாய்
திருமதி. ஜெய்மதி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாவ்டி, கோட்லி ஆகிய கிராமங்களுக்காக, புவனேஷ்வரி, சமி ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ரெய்னி கோடா (உடல் வலி), போட்லி பொட்டாய் (கழுத்து வலி), சமி குமிட்டி (பெலவீனம்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, மோட்டே சலாம், ரஸ்சு சலாம் ஆகியோர் கிறிஸ்துவில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: செல்வி. கசினி துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மொடேங்கா, பல்னா, சிங்னார், பலோடா பூட்டான் சாதுகாவ், உடித்காவ் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட காஜே நேத்தாமுக்காக, புத்தினி (நெஞ்சு வலி), தர்பனி (இடுப்பு வலி) ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். காசே நேத்தாம், சம்ரூ ஆகியோர் இரட்சிக்கப்பட, கொர்சு (வலிப்பு நோய்), ஸப்கார் (மயக்கம்), ராது (சர்க்கரை நோய்) ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காக ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.தேசிராம் வட்டே
திருமதி. ரானோ வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காராவாண்ட், மூஞ்மெட்டா, சிவ்னி, திம்நார் ஆகிய கிராமங்களுக்காக, உபவாசக் கூடுகை, பெண்கள் கூடுகை, ஆண்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, சிறுவர் ஊழியம் ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். ராம்தாய் பொட்டாய் (சரீர பெலவீனம்), ரானாய் வட்டே ( 1 வருட வயிற்று வலி) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ரதான் யாதவுக்கு விரைவில் திருமணம் நடைபெற, இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் இறக்கும்போது, அவர்களை அடக்கம்செய்யவிடாமல் தடுப்பவர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜக்நாத்குமிட்டி
திருமதி. சுக்கோ குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிடுகாபேடா, பரண்டா, கேராபட், ஜோட்டே, ஜெய்பூரிஆகிய கிராமங்களுக்காக, உபவாசக்கூடுகை, பெண்கள் கூடுகை, சிறுவர் ஊழியம் ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். பரண்டா கிராமத்தில் பட்டா கிடைக்காத 10 பேருக்கு விரைவில் பட்டா கிடைக்க, ராய்தர் பேயார், புத்தினா ஆகியோருக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.லட்சு கருங்கா
திருமதி. புல்தாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்பால், கர்லக்கா, கொர்ரா, இருக்கோ, கட்காகாவ், சீண்டுபாரா ஆகிய கிராமங்களுக்காக, புல்தாய் கருங்காவிற்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காக, ராம்தாய் ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்ததற்காகத் துதிப்போம். ரஸ்சு–சன்னத், பிரதீப்–ரமாய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, புல்லுமாவிற்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சன்னு துக்கா
திருமதி. மனிஷா துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்க்கபேடா, மூங்மேடா, காப்சி ஆகிய

கிராமங்களுக்காக, ஊழியரின் சகோதரிக்கு திருமணம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். பத்ரூ வட்டே விசுவாசத்தில் வளர, விசுவாசிகள் ஒற்றுமையுடன் வாழ ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சுக்மன் பொட்டாய்**
**திருமதி. சுக்மி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மட்டாவாண்ட், நாராயண்பூர் ஆகிய கிராமங்களுக்காக, உபவாச ஜெபம், பழைய ஏற்பாடு மொழி பெயர்ப்பு ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. கோத்தாய் பொட்டாய்**
**செல்வி. பஜாரி கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வேத்மாகோட், மண்டோகி, மொரஸ்கோடா, பரஸ்காவ் ஆகிய கிரமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட பூணத்திற்காக, சுனித்தாவின் திருமணம் நடைபெற்றதற்காக, பஜாரி இறையியல் கல்வியை முடித்து ஊழியத்தில் இணைந்ததற்காகத் துதிப்போம். பிரூ (காச நோய்), சோம்தேரு (வயிற்று வலி), சிங்கலு (மூட்டு வலி), சுக்தி (கண் நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ரவி தேர்வில் வெற்றி பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. பஜ்நாத் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குட்ரபாரா, ரேமாவாண்ட், பக்ரூ பாரா, பாத்ரூடண்ட் பாரா, சாந்தி நகர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட புத்தினி சலாம், சுக்தாய் சலாம், பாண்ட்ரூ சலாம், சாந்த்லால் நேதாம் ஆகியோருக்காக, ஷியா சலாமிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, புவனேஷ்வரி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்க, ருக்குமதிக்கு விக்கல் நின்றதற்காகத் துதிப்போம். கர்ஷ் (வலிப்பு நோய்), பத்ரூ சலாம் (இரத்த அழுத்தம்), புத்தினி கொர்ரம் (சரீர பெலவீனம்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, மான்கு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திருமதி. தன்பத்தி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொகுடா, ரேமாவண்ட், நயானார் ஆகிய கிராமங்களுக்காக, சுசீலா வட்டே நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காகத் துதிப்போம். ரத்தாய் வட்டே முழங்கால் வலியிலிருந்து சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சொகாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தேவ்காவ், கொகுடா, கோடுகாவ், பிரள்பட் ஆகிய கிராமங்களுக்காக, சாந்தி (மஞ்சள் காமாலை), சுதாய் பொட்டாய் (வயிற்று வலி), சரித்தா (வயிற்று போக்கு) ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சுவித்தா (சர்க்கரை நோய்) சுகம் பெற, அஜய் இரட்சிக்கப்பட, சொனாய் ஆசீர்வதிக்கப்பட, அணில் மண்டாவி, அனிஷ் மண்டாவி, உமேஷ் பொட்டாய், சரீத்தா கருங்கா, ஆர்த்தி மண்டாவி, உமிளா பொட்டாய், ரமோலி பொட்டாய், ராம்பத்தி பொட்டாய் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, சங்கீதா, துல்லு, சம்ரா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. லால்சாய் பொட்டாய்**
**திருமதி. சீத்தா பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட முண்டுபால், முஸ்குடும், கட்காகாவ் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மான்சிங் கச்லாம்**
**திருமதி. சுல்மதி கச்லாம்**

வெள்ளி

நற்செய்தி அறிக்கப்பட்ட கோங்லா, ஸாரா ஆகிய கிராமங்களுக்காக, மன்தேர்,சுக்தாய், செக்தேர், சுக்லி ஆகியோர் விசுவாசத்தில் வளருவதற்காகத் துதிப்போம். மங்கத்து உய்கே, சீதாராம் உய்கே, ஜெக்தேவ் ஆகியோர் இரட்சிக்கப்பட, மட்மனார் விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, ரமேஷ் சலாம் கண்நோயிலிருந்து சுகம் பெற

ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்துராம் வட்டே**
**திருமதி. சுகோந்தின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாராயண்பூர், கோட்டாபென்னூர், கர்மாரி, டாட்டோநார் ஆகிய பகுதிகளுக்காக, உபவாசக் கூடுகை, வீட்டுக்கூட்டம், முழு இரவு ஜெபம், வாலிபர் கூடுகை ஆகியவை நடைபெறுவதற்காக, சம்தேர்க்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ராசு சலாம் இரட்சிக்கப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜார்கண்ட் மாநிலம்**

**அருட்பணியாளர்: திரு. குந்தர் பகெல்**
**திருமதி. மம்தா பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மாங்கை, பல்ராம்பூர், டால்டோன் கன்ச், சந்தாவா, லாம்பி, டாடாபானி ஆகிய கிராமங்களுக்காக, சபை வளர்ச்சிக்காக 3 நாள் சிறப்புக்கூட்டங்கள் நடைபெற்றதற்காக, கோடை விடுமுறை சிறுவர் வேதாகமப் பள்ளி சிறப்பாக நடைபெற்றதற்காகத் துதிப்போம். ஆசிஷ் மனநோயிலிருந்து சுகம் பெற, மான்ஜி, கோர்வார், குப்தா, ஓரான், புய்யார், ப்ளாக் சுமித் ஆகிய இன மக்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மங்கள் மராண்டி**
**திருமதி. சுகாஜினி சௌரேன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லப்தா காடி, ஜர்ஜுடி, காட்பாந்தா, கில்ஹா, பாதேலா, சோட்டாபோக்ரிய்யா, ஜாகேஷ்வர் ஆகிய கிராமங்களுக்காக, பாபுராமின் உடைந்த எலும்புகள் சுகம் பெற்றதற்காக, சுகாசினியின் கர்ப்பத்தில் வளருகின்ற குழந்தை பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். முனிமுர்மு இரட்சிக்கப்பட, தாலாமய் டுட்டு கண் நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**உத்தரப்பிரதேசம்**

**(அவாதி, மிஸ்ரா, ராஜ்புத், கௌதம், தாக்கூர், சௌகான், சௌத்ரி-ஆகிய மக்கள் கூட்டத்தினர்)**

**அருட்பணியாளர்: திரு. ராம்ஜியவான்**
**திருமதி. ராஜ்லட்சுமி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிஸ்வா, இஸ்பாபூர், மதன்பூர், மெய்பத்பூர், சரெய்யா, மூரத்பூர், ஜம்பா, பூடான்பூர், பிஜென்டா, படாய்பூர், கங்காபூர், மடியாவா, ஜான்பூர், கினோத்தி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட திர்ரிபூர் ஜெப குழுவிற்காக, நீலம் கல்லீரல் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, ராம்நரேசுக்கு திருமணம் நடைபெற்றதற்காக, கீதா (பக்கவாதம்), கமலா சுவாச நோய்), ராஜ்குமாரி (மார்பகக் கட்டி) ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஷீலா தேவி–சஞ்சய் தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ரேகா (சிறுநீரகக்கல் அடைப்பு நோய்), மனோஜ்–புஷ்பா (மஞ்சள் காமாலை நோய்), குஷ்மா (நீண்டநாய் தலைவலி) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மிதிலேஷ்குமார்**
**திருமதி. சுனித்தா தேவி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பக்கரியாஹர், மூடா, சுத்தரி, குச்சல்ஹா, ஹரெய்யா, லங்கடிபூர், ஹசரியா, கோலா, காவேல்பூர், மாட்டாபூர்வா, மஜ்ரா, சிரெய்ஜா, சுர்ஜி பூர்வா, கூஷ்மௌரி, திங்கூர் பூர்வா, மாணிக்பூர் ஆகிய கிராமங்களுக்காக, 10 வருடங்கள் கழித்து சோனி–ரஞ்சித் தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, சுனில் குமார் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக, சுனித்தா தேவி கர்ப்பப்பை நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, திருமுழுக்கு பெற்ற மால்தி தேவி, ராம்குமாரி, மனோஜ்குமார் ஆகியோருக்காகத் துதிப்போம். சந்தியாதேவி (சிறுநீரகக்கல் நோய்), சந்தோஷ்குமார் (வலிப்பு நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ஹரிஹரன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**ஆந்திரா மாநிலம் (தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**
**திரு. வெங்கடேஸ்வரலு**
**திருமதி. கடம் புஷ்பம் குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டொட்லவாரமிட்டா, நாயுடுபேட்டா, கானூரு

ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சாய், ஆனந்த், மணி, வெங்கட், வினய் ஆகியோருக்காக, திருமுழுக்கு பெற்ற பீட்டர் சாமுவேல், சாலமன்ராஜ், டொட்லவாரமிட்டாவில் தடை செய்யப்பட்டிருந்த ஜெபக்குழு மீண்டும் தொடங்கப்பட்டதற்காகத் துதிப்போம். நாயுடுபேட்டா ஆலயம் மறுகட்டுமானப் பணிக்கானத் தேவைகள் சந்திக்கப்பட, சாய், லட்சுமி ஆகியோர் இரட்சிக்கப்பட, தாயை இழந்துள்ள அகிலின் குடும்ப ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. பால் வீரமணி**
**திருமதி. பெல்சியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கானூரு, டொட்லவாரமிட்டா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஹரி, மனம்மா ஆகியோருக்காக, தெலுங்கு மொழி கற்றுக் கொள்வதில் கர்த்தர் கொடுத்த ஆர்வத்திற்காகத் துதிப்போம். உள்ளூர் மொழி நடையில் தெலுங்கு மொழியைப் பேச, சபை இல்லாத இடங்களில் திருச்சபை தொடங்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. உதய்குமார்**
**திருமதி. பிரசன்னா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடரெட்டி காலனி, ஹாரநாதபுரம் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சூர்யா, பாப்பைய்யா, ராசு ஆகியோருக்காகத் துதிப்போம். ஆலயத்திற்கு கழிவறை கட்டப்பட, கோடை விடுமுறை சிறுவர் ஊழியத்தின் மூலமாக சந்திக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்ந்து ஓய்வுநாள் பள்ளியில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. பத்தலா மதுசுதாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெரிமிடி(BC காலனி), துவாரகாபுரம்(OC காலனி) ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கிருஷ்ணம்மா—அவருடைய குடும்பம், சுகன்யா ஆகியோருக்காகத் துதிப்போம். ஆலயத்துக்கு மின் இணைப்பு கிடைக்க, திருச்சபை குடும்பங்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக, சிறுவர் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

**கர்நாடக மாநிலம் - தேவனஹள்ளி(தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**

**திரு. சாமுவேல் பிரபாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கும்பரஹள்ளி, சோளதேவனஹள்ளி ஆகிய பகுதிகளுக்காக புதிதாக நற்செய்தி கேட்ட நாராயணப்பா, முனியம்மாள், நாகேஷ் ஆகியோருக்காகத் துதிப்போம். நாராயணப்பா, முனியம்மாள் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஒடிசா**

**அருட்பணியாளர்: திரு. டேனியல் சாந்தா**
**திருமதி. புலிமி சாந்தா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குமுடகுடா, ஒச்சன் குடா, காசிகுடா, பேலாபுட், மாட்டிக்கல் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொள்கிற கோபால் மனைவிக்காக, ரின்னா, ரமேஷ் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். துல்போ, கொங்கா, பன்ரூ ஆகியோர் இரட்சிக்கப்பட, கோபி, சன்னியாசி ஆகியோர் பயத்தின் ஆவியிலிருந்து விடுதலை பெற, ராமு, சொனாய், நொந்தோ, தொப்ளி, தொப்னா ஆகியோர் இரட்சிக்கப்பட, கானிங்பொத்தூர் கிராமத்தில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. அப்பொல் மண்டல்**
**திருமதி. சுமித்ரா மண்டல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிலிடோங்கிரி, கோன்ஷாப் பாரா, துமர்திகி, பரசுண்டி, தொட்ரபாரா ஆகிய கிராமங்களுக்காக, சந்தோஷிக்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காக, வீணா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஊழியரின் மகன் கிரேசன் மூல நோயிலிருந்து சுகம் பெற, ஆலயம் கட்டப்பட, மால்பேடா கிராமத்தில் நற்செய்தி அறிவிக்க ஏற்பட்டுள்ள எதிர்ப்புகள் மறைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திருமதி. ஜானகி மாஜி**
**திரு. லெலன்-திருமதி.பிரிட்டி லெலன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிமிலி குடா, பாப்லி, கபித்தா, நாகூல், மான்பார் ஆகிய கிராமங்களுக்காக, பிட்டம்பர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, சம்மீர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சம்லேஸ் இரத்த அழுத்த நோயிலிருந்து சுகம் பெற, பர்கட் சிறையிலிருந்து விடுதலை பெற, ராதாவின் பொருளாதார நிலை சீராக ஜெபிப்போம்.

**குக்கி அருட்பணியாளர்கள்**
**(வடகிழக்கு மாநிலங்கள்)**

**அருட்பணியாளர்: திரு. நபின் நர்ஜினரி**
**(அருணாச்சல பிரதேசம்)**

**சனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அலுபாரி, சிவாஜி நகர், லோஹித்பூர், பயா, மேகய்லியங், கோரலியங், டாப்ரஹான், தெல்லுலியங், பயன், 20ஆவது மைல் ஆகிய பகுதிகளுக்காக, ஹடிதுபாவில் திரைப்பட ஊழியம் மூலமாக 15பேர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, தியா கோரா விசுவாத்தில் வளருவதற்காகத்துதிப்போம். ஊழியரின் தாயார், ரீட்டா பரிஹர் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, மதமாற்றத் தடைச்சட்டம் நீக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. தங்காலுன் கிப்கின் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ருகாசன், மோலன், அமராஞ்சன், வோம்லி, ஜவ்ஜங், எக்ரானி, ஷுகஞ்சன் ஆகிய பகுதிகளுக்காக, வீட்டுக்கூட்டம், நோயுற்றவர்களை சந்தித்தல், உபவாச ஜெபம் ஆகியவை தொடர்ந்து நடைபெறுவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஆபிரகாம் தௌதாங்**
**(மேற்கு வங்கம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தெபித்ங்கா, பாபுபாஷா, சில்வர் டேல், சிஆர்பிஎப் குடியிருப்பு, சிவ்மந்திர் ஆகிய பகுதிகளுக்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக்கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். நிட்டா ராணி, டேனியல் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஹெம்ஹோசன் ஹோகிப்**
**(அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெகுலியங், கெப்ருலியங், ஹடிதுபா, யய்லிங் ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காக, ராகுல் தமாய், சூவான் தாக்ரோ ஆகியோர் விசுவாசத்தில் வளருவதற்காக, மோனு மன்யு போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று வருவதற்காகத் துதிப்போம். சபையில் நடைபெறும் இசைப்பயிற்சியில் அநேகர் கலந்து கொள்ள, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. இங்காம்போ ஹோகிப் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அம்ரஜன், கர்பி, ஆங்லாங் ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காக, அருட்பணியாளர்கள் கூடுகை நடைபெற்றதற்காகத் துதிப்போம். பள்ளி நிர்வாகம் நல்லமுறையில் செய்யப்பட, மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்காக, ஆசிரியர்கள் சிறப்பான முறையில் கற்றுக் கொடுக்க, விடுதியில் பயிலும் மாணவர்கள் நல்லமுறையில் படிக்க, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் ஒருமனதோடு செயல்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. செய்கோதாங் ஹோகிப் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சோம், மேல் மாங்மோ, டென்டம் மருத்துவமனை ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். ராய், லிம்பூ, சர்மா, தமங், குருங், புட்டியா, லெப்சா, பிரதான், ஷெர்பா ஆகிய இன குழுக்கள்

இரட்சிக்கப்பட, மார்டாமில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, டென்டாமில் ஆலயம் கட்டப்பட—தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. சத்யாபாஸி மோல்சம் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட எம்புருட் சேரா, கமலா சேரா, மேகஸின், ஹவாய்பாரி ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக் கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காகத் துதிப்போம். ஊழியரின் மகனுக்கு அரசு கல்வி உதவித்தொகை கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. செய்கோலன் குய்டி (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நெய்லஹா, டான்சாரா, எம்புருட் சேரா, பங்க்ஜங்க், கெய்கன், ஜாவ்காவ், லாங்ஜோல், முன்பி ஆகிய பகுதிகளுக்காக, எம்புருட்சேராவில் 6பேர் திருமுழுக்குப் பெற்றதற்காகத்துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, மோமோகோ நிறைவான சுகம் பெற, மோல்சம், தெப்பர்மா, ரியாங் ஆகிய இன குழுக்கள் இரட்சிக்கப்பட , புத்தி குடும்பத்தினர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. லென்ஹோகோ ஹோகிப் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாவ்ல்காவ், ஸ்ரீலங்கா, சால்டாசெரா, எம்புருட் சேரா, டான்சாரா ஆகிய பகுதிகளுக்காக, வேத ஆராய்ச்சிக்கூட்டம், உபவாச ஜெபம், குடும்பக்கூட்டம், திரைப்பட ஊழியம் நடைபெற்றதற்காக, 6 பேர் திருமுழுக்கு பெற்றதற்காகத் துதிப்போம். ஆராதனைக்கு வரவிடாமல் தடுக்கும் சங்கி மோல்சமின் கணவர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. செய்மிங்தங் கிப்கின் (மணிப்பூர்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கேம்ங்காய், காங்குய், கேமிங்பாய், ஹோலப், பைஜிங், மோங்தங், கங்க்போக்பி, ஹோலிஜங் ஆகிய பகுதிகளுக்காக, வீடு சந்திப்பு, மருத்துவமனை சந்திப்பு, ஞாயிறு ஆராதனை ஆகியவை நடைபெற்றதற்காகத் துதிப்போம். மணிப்பூர் அகதிகள் முகாமிலுள்ளவர்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஸ்டீபன் லுங்கோஜின் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்டம், மேற்கு சிக்கிம் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். பாரம்பரிய கலாச்சாரம்—பண்பாட்டை பெற்றுள்ள இந்த மக்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள, ஆலோசனை மையம் அமைக்கப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**செல்வி. லிங்னெய்கிம் (அருணாச்சல பிரதேசம்)**

மாணவர் ஐக்கியம், வேதாகம வகுப்பு, ஆராதனை ஆகியவை நடைபெறுவதற்காக, மாணவர்கள் நல்லமுறையில் தேர்ச்சி பெற்றதற்காக, சஜித் அகங் மனந்திரும்பியதற்காக, மாணவர் ஐக்கியம், வேத ஆராய்ச்சி வகுப்பு, ஆங்கில ஆராதனை ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். மாணவர் விடுதி விரிவாக்கம் செய்யப்பட, விடுதி காப்பாளருக்கு வீடு கட்டப்பட, மாணவர்கள் கல்வியிலும், ஆவிக்குரிய வாழ்விலும் சிறந்து விளங்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஹோலன்லால் கிப்கின் (அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நியூ மேகலியங், சிவாஜி நகர், ஜெலக் பாரி, பயஹாம், தங்லத், ஹஜுஹாம், திகாரு நதி, ஹலியாங், சைடியாங், பழங்குடியினர் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்காக, ஊழியர் நிறைவான சுகம் பெற்றதற்காக, கரிங்சோ மன்யு குடும்பத்தினர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். சய்தோம் பக்கவாத நோயிலிருந்து சுகம் பெற, மந்திலம் ட்ராய் குடும்பத்தினர் பிசாசின் தொந்தரவுகளிலிருந்து விடுதலை பெற, பஜன்சோ தின்ட்யா குடும்பத்தினர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## அருட்பணியாற்ற அர்ப்பணித்துள்ளவரா?
## உங்களுக்காகத்தான்!

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன், இந்தியாவிலுள்ள சந்திக்கப்படாத மக்கள் கூட்டங்களை நற்செய்தியால் சந்திக்கும் சபை பாகுபாடற்ற ஓர் அருட்பணி இயக்கமாகும். ஆண்டவரின் சத்தம் கேட்டு, அவர் சித்தம் செய்ய அர்ப்பணித்துள்ள இயேசுவின் சீடர்களே, எங்களுடன் இணைந்து அருட்பணியாற்ற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

கீழ்க்காணும் தகுதியுள்ள ஆண்/பெண் அருட்பணியாளர்கள், தங்களுடைய விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சலுக்கோ அனுப்புங்கள்.

**கல்வித்தகுதி:** குறைந்தபட்சம் பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் இறையியல் கல்வி.

**வயது:** 21 வயதுக்கு மேல்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இந்தியாவில் **ICGM** அருட்பணியாற்றும் எந்த மாநிலத்திலும் அருட்பணியாற்ற அனுப்பப்படுவார்கள்.

**பொதுச்சேவகர்,**

**இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்,**

58/1. முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை- 600073.

---

## ICGM வங்கி கணக்கு விபரங்கள்

அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கைக்காக

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number: 10143136773**
**Bank : State Bank of India**
**Branch Name : Selaiyur, Chennai-73**
**IFSC Code : SBIN0007948**

icgm1014@sbi

ஆலயக் கட்டிட நிதிக்காக

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number: 1 1 1 9 4 4 5 4 5 3 1**
**Bank : State Bank of India**
**Branch Name : Vinayaganagar, Madurai.**
**IFSC Code : S B I N 0 0 0 1 4 7 9**

மருத்துவ நிதிக்காக

**Account Name : ICGM MEDICAL EMERGENCY ENDOWMENT FUND**
**Account Number: 3 1 9 6 1 0 3 6 9 2 1**
**Bank : State Bank of India**
**Branch Name : SELAIYUR, Chennai-73.**
**IFSC Code : S B I N 0 0 0 7 9 4 8**

வங்கி மூலமாக காணிக்கைகளை அனுப்புபவர்கள், அவ்விபரங்களை நமது அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ, **SMS** மூலமாகவோ/ **Whatsapp** மூலமாகவோ 94421 50482 என்ற எண்ணுக்கு தகவல் அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

மேலேயுள்ள **QR** கோடை பயன்படுத்தியும் உங்களுடைய காணிக்கையைச் செலுத்தலாம்.





# உடன்படிக்கைகளும் அருட்பணியும்

Dr.N.J. ஞானையா

**மாணிக்கம்:** குட் ஈவினிங் ஜான். கடந்த ஞாயிறு நம் ஆலயத்தில் திருவிருந்து என்னும் நற்கருணை (ஆண்டவரின் மேசை) சமயத்தில், வழக்கமாக குருவானவர் வாசிக்கும் பகுதியில் ஒன்று என் கருத்தைக் கவர்ந்தது.

**ஜான்:** அது 1 கொரிந்தியர் 11:23 முதல் 31 தானே. எல்லாச் சபைகளிலும், அதை வாசித்துவிட்டு திருவிருந்து தருகிறார்கள். இதில் எந்தப் பகுதி உன் கருத்தைக் கவர்ந்தது?

**மாணிக்கம்:** முதலில் அப்பத்தைப்பிட்ட இயேசு, பின்னர் பாத்திரத்தை எடுக்கிறார். அப்போது, அவர் "இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" என்று கூறிவிட்டு, என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். அதிலே வரும் புதிய உடன்படிக்கை என்ற சொற்றொடர் என்னைக் கவர்ந்தது. ஆனால், அதன் விளக்கம் புரியவில்லை.

**ஜான்:** அதை விளக்க நம் பேராசிரியர் சாலமோன் இருக்கிறாரே!

(அந்தச் சமயத்தில் சாலமோன் வருகிறார்)

**சாலமோன்:** என்ன தம்பிகளே நான் வருமுன்னரே என் பெயர் அடிபடுகிறது.

**ஜானும், மாணிக்கமும்:** குட் ஈவினிங் சார். எப்படியிருக்கீங்க?

**சாலமோன்:** நல்ல சுகம். என்ன விளக்கம் தேவை.

**மாணிக்கம்:** அதாவது, கடந்த ஞாயிறு திருவிருந்திற்கு முன் வாசித்த பகுதியில் வரும், புதிய உடன்படிக்கை என்றால் என்ன? அப்படியானால் பழைய உடன்படிக்கை ஒன்று உண்டா?

**சாலமோன்:** நல்ல கேள்வி!. நம் தேவன், உலக வரலாற்றில் உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார். அவற்றை, ஆங்கிலத்தில் (Covenant) என்று அழைக்கிறோம். புதிய ஏற்பாட்டில், ஆண்டவர் இயேசு, பெரிய வியாழன் அன்று நடத்திய பஸ்கா ஆசரிப்பில், இந்த புதிய உடன்படிக்கை பற்றிக் கூறுகிறார். மத்தேயு (26:28), மாற்கு (14:24), லூக்கா (22:20) ஆகிய மூன்று நற்செய்தி நூல்களிலும் இது பதிவாகியுள்ளது. பழைய ஏற்பாட்டில், நாம் நான்கு உடன்படிக்கைகளைப் பற்றி அறிகிறோம். அவற்றைப் பழைய உடன்படிக்கை என்று கூறுகிறோம்.

**ஜான்:** (வியப்பாக) நான்கு உடன்படிக்கைகளா? தயவு செய்து அவற்றைப் பற்றிச் சொல்லுங்கள்.

**சாலமோன்:** உங்களுக்கு ஓரளவு அந்த வரலாறுகள் தெரியும். அதை, நான்

நினைவுபடுத்தினால் சரியாகப் புரிந்து கொள்ளுவீர்கள். சில வாரங்களுக்கு முன்னர், நாம் நோவாவின் வரலாற்றைப் பற்றிப் பேசினோம்.

ஜானும், **மாணிக்கமும்:** ஆம் நன்றாக நினைவில் இருக்கிறது.

**சாலமோன்:** நோவாவுடன் ஆண்டவர் ஏற்படுத்திய உடன்படிக்கை, பழைய உடன்படிக்கைகளில் முதலாவது என்று கூறலாம். ஆதியாகமம் 9:10–17இல் அதை நாம் வாசிக்கிறோம். தண்ணீரினால் இனி இந்த உலகம் அழியாது என்பதும் அதன் அடையாளமாக வானவில் இருக்கிறது என்பதும் நாம் அறிந்த உண்மைகளே. ஆங்காங்கே வெள்ளப்பெருக்குகள் நிகழலாம்–சில ஆண்டுகளுக்கு முன்னர், சுனாமி சில நாடுகளைப் பாதித்தது. மக்கள் மாண்டனர். ஆனால், உலகம் முழுவதும் அதன் பாதிப்பு இல்லை. அதுதான் நோவாவுடனான உடன்படிக்கை.

ஜான்: நல்ல விளக்கம். அடுத்த உடன்படிக்கை என்ன?

**சாலமோன்:** அது ஆபிரகாமுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை. ஆதியாகமம் 17ஆம் அதிகாரத்தின் முற்பகுதியில் வருகிறது. திருவிவிலியம் அழகாக அதை இப்படிச் சொல்லுகிறது: "நான் எல்லாம் வல்ல இறைவன்; உனக்கும் எனக்குமிடையே நான் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் பெருகச் செய்வேன். எண்ணற்ற இனங்களுக்கு நீ தந்தையாகப்போவதால் உன் பெயரை ஆபிராம் என்பதில் இருந்து ஆபிரகாம் என மாற்றுகிறேன்."

**மாணிக்கம்:** நோவாவிற்கு வானவில் அடையாளம் போன்று ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு ஏதேனும் உண்டா?

**சாலமோன்:** ஆம்! அதுதான் விருத்தசேதனம். ஆபிரகாமைத் தந்தை என்று அழைக்கும் யூதர்களும் (ஈசாக்கு வழியினர்), இஸ்லாமிய மக்களும் (இஸ்மவேல் வழியினர்) இன்றும் கடைப்பிடிக்கும் ஒரு பழக்கம் அது.

ஜான்: கேட்பதற்கே வியப்பாக உள்ளது. அடுத்து என்ன பழைய உடன்படிக்கை?

**சாலமோன்:** மூன்றாவது பழைய உடன்படிக்கை, மோசே காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. அது, ஆண்டவர் இஸ்ரவேல் மக்களுக்குத் தந்த நியாயப்பிரமாணம். கர்த்தரின் கட்டளைகள் என்பவைகளை அவர்கள் செய்தால் வரும் ஆசீர்வாதங்களும், செய்யாவிடில் வரும் சாபங்களும் உபாகமம் 28ஆம் அதிகாரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மோசேயின் உடன்படிக்கைக்கு அடையாளம் பத்துக்கற்பனைகளே!

**மாணிக்கம்:** நான்காவது பழைய உடன்படிக்கை என்ன?

**சாலமோன்:** அது தாவீதுடன் ஏற்படுத்திய உடன்படிக்கை. தாவீதின் அரசு என்றும் இருக்கும் என்று கூறும் அந்த உடன்படிக்கையை 2 சாமுவேல் 7:16இல் வாசிக்கிறோம்.

ஜான்: ஆனால், இன்று இஸ்ரவேல் நாட்டின் அரசு, மக்களாட்சியாகத்தானே இருக்கிறது!

**சாலமோன்:** அது உண்மை. ஆனால்,

தேவன் தாவீதின் சிங்காசனம் என்றும் இருக்கும் என்ற உடன்படிக்கை (சங்.132:12) இயேசுவின் ஆட்சி (அல்லது இறையரசு) பற்றிய தீர்க்கதரிசனமான ஓர் உடன்படிக்கை. இந்த நான்கு உடன்படிக்கைகளும் நிறைவேற ஒரு புதிய உடன்படிக்கை தேவையானது. அதைத்தான் திருவிருந்திற்கு முன் வாசிக்கும் பகுதியில் நாம் பார்க்கிறோம். ஆனால், இந்த புதிய உடன்படிக்கை பற்றி எரேமியா 31:31இலும் நாம் வாசிக்கிறோம். எரேமியா தீர்க்கதரிசனமாக புதிய உடன்படிக்கை என்று எழுதுகிறார்.

**மாணிக்கம்:** இந்த பழைய உடன்படிக்கைகளை, எப்படி இயேசு கூறிய புதிய உடன்படிக்கையுடன் இணைப்பது ?

**சாலமோன்:** நல்ல கேள்வி! அண்மையில் நான் படித்த ஒரு நூலில், அதற்கு அழகான விடையைச் சென்னையில் மிஷனரிப் பேராயராகப் பணிசெய்த பிஷப் லெஸ்லி நியூபிகின் எழுதியுள்ளார். அதை நான் ஆங்கிலத்தில் கூறுகிறேன்: The covenant that God made with the whole human race through Noah (Gen 9) which He made with Abraham for the sake of the Nations (Gen 12) and which He renewed and sealed forever in the sacrifice of Jesus (1 Corinthian. 11) is a covenant of free, unconditional grace. நேரம் ஆகிவிட்டது. அடுத்தவாரம் சந்திப்போமா?

**ஜானும் மாணிக்கமும்:** நம் தேவனின் அருமையான பழைய உடன்படிக்கைகளையும் அவற்றுடன் ஆண்டவரின் புதிய உடன்படிக்கையையும் இணைத்துக்காட்டிய பேராயருக்கும், அதை எங்களுக்கு உணர்த்திய உங்களுக்கும் நன்றி–நன்றி. அடுத்த வாரம் எப்போது வரும் என்று காத்திருக்கிறோம்.

**அடுத்த மாதமும் தொடருவோம்...**

# 2025 மே மாத வேத வினாக்களுக்கு விடைகள்

## லூக்கா 17-24 அதிகாரங்கள் வரை

**பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. எம்மாவு | – கிராமம் | 24:13 |
| 2. பச்சை மரம் | – பட்ட மரம் | 23:31 |
| 3. காவல் | – சாவு | 22:33 |
| 4. தத்தளிப்பு | – இடுக்கண் | 21:25 |
| 5. இராயன் | – தேவன் | 20:25 |

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. மனந்திரும்புதலும், எருசலேம், நாமத்தினாலே 24:47
2. மகா பூமியதிர்ச்சிகளும், கொள்ளை நோய்களும், தோற்றங்களும், அடையாளங்களும் 21:11
3. ஜெபவீடாயிருக்கிறதென்று, கள்ளர் குகையாக்கினீர்கள் 19:46
4. தேவனுடைய, ஒட்டகமானது, ஊசியின், எளிதாயிருக்கும். 18:25
5. மின்னல், மறுதிசை, பிரகாசிக்கிறது போல, நாளிலே. 17:24

**விடை எழுதுக**

1. இயேசு. 24:28
2. ஆலோசனைக்காரன், உத்தமன், நீதிமான். 23:50,51
3. சிரேனே ஊரானாகிய சீமோன். 23:26
4. வானமும், பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகள் ஒழிந்து போவதில்லை. 21:33
5. வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல். 20:17



## 2025 மே மாத வேத வினா – விடை போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்களைப் பாராட்டுகிறோம்.

**மதுரை**
பங்கஜம் மார்த்தாண்டம்
மனோகராஜ்
ஞானசிரோன்மணி
தெல்மா ஸ்டான்லி
வினோதினி
ரெத்னாபாய் ஜேசுதாசன்
சுசீலா ஆபிரகாம்
சம்பு ஜெயச்சந்திரன்
ஆசீர்வாதம்
வெற்றிச்செல்வி
குளோரி மல்லிகா
ஜெயராணி மோகன்
ராணி ஸ்டான்லி பால்
ஜெமி ஸ்டீபன்
கலா செல்வகுமாரி
ஸ்டெல்லா சற்குணராஜ்
ஆண்ட்ரூஸ்
ரஜினி பியூலா ஷோபிகா
குளோரி ஸ்டீபன்
டேவிட் ஜெயச்சந்திரன்

**கன்னியாகுமரி**
ரெத்னா ராஜ்குமார்
ரோஹிணி ஜேசன்
லலிதா நெல்சன்
லில்லி புஷ்பம்
ஹெப்சிபா நசல்
டேவிட்சன்
மோகன் சி கமலம்
அருளப்பன்
தேவசகாயம்
சாம் அன்பு சகாயம்
டேவிட் மனோகர்
பமீலா எட்வின்
பிராகரன்ஸ் தங்கராஜ்
லீலா அய்யாக்கண்
பிரேமா ஜெரால்டு
ரமணி ராஜ்குமார்
கிறிஸ்டாபெல் ஜெயந்தி
பியூலா ஜான்சன்
பியூலா பால்ராஜ்

**திருநெல்வேலி**
விஜயவல்லி ஜான்
ஹெலன் ரோஸ் ஜீவன்தாஸ்
அன்பு சுதந்திரம்
பெட்ரிசியா ஜஸ்டஸ்
சுந்தரி ஸ்டீபன்
ஜேன் தர்மராஜ்
கஸ்தூரி எலியாஸ்
ஜெபா நியூட்டன்
செல்வராஜ்
தாமஸ்
லதா
ஜாஸ்மின் சாம்சன்
பொன்னுத்தாய் செல்வராஜ்
செல்வி பொன்னரசி
வசந்தா பாலசேகரன்
சந்திரபோஸ்
வயலட் கிறிஸ்டோபர்
சந்திரலீலா திரவியம்
ரோஸ்லின் ஜோசப்
பாக்கியம்
ஜெபக்குட்டி மோசஸ்
பிரின்சஸ் சுரேந்திரநாத்
நூர்ஜி
கிரேஸ் அகஸ்டின்
பத்மா ராஜையா
சாந்தி ராஜன்
பாக்கியவதி சாமுவேல்
ஜெயக்குமார் காலேப்
ஜெயசிங்
ஜாஸ்மின் டெல்பியா
ஜெனிபர் சில்வியா
இந்திரா ஜெயராஜ்
ரெஜினா சாலமோன்
கிளாடிஸ் ராஜையா

**தென்காசி**
செல்வி ஜேக்கப்

**தூத்துக்குடி**
லீலா டேவிட்சன்
ஜெலன் திலக்
எஸ்தர்
ஜாய்ஸ் ஜான்சன்
அந்தோணியம்மாள்
தேவகிருபை
ரெத்னாம்பாள் ஈஸ்டர்ராஜ்
கிருபாசனம் ரெமீஜியஸ்
ஆலீஸ் குணசீலி
ஜோதிமணி வில்சன்
சுதா டேவிட்
சாலமோன்
ரெத்னாவதி முத்துராஜ்
அன்னத்தாய் ஆல்பர்ட்
ஷேபா கோயில்பிச்சை
ரூபவல்யா
தேவமணி ஆபிரகாம்
புஷ்பராணி ஜேம்ஸ்
சேசம்மாள் தேவசகாயம்
இன்பநாயகம்
அசோக்குமார் பிரின்ஸ்
ஆதிசிரோன்மணி ஞானதீபம்
சுகிர்தவல்லி பொன்னுசாமி
ரேச்சல் தவமணி
சந்திரா
எஸ்தர்
ஞானமணி எப்சிபா
புனிதா சாமுவேல்
சாந்தகுமாரி

**சென்னை**
செலின் ராணி டேவிட்
கனகா வேணுகோபால்
மில்காள் சாம்
துரைராஜ்
ஜெயசந்திரன்
சாந்தி டென்னிசன்
ஜெபமேரி சந்திரசேகரன்
அன்னாள் ஜான்
ஜோன் தேவநாயகம்
யூனிஸ் ரிச்சர்ட்
டேவிட் ஜெயக்குமார்
டோரிஸ் பிலோமினா

**திருச்சி**
திலீப்குமார்
ஜெபசீலி ஜெயகொடி
லில்லியன் ஜோசப்
சூசன்னா
ஜெபமணி
டேவிட்
ராணி
ஒய்ஸ்லைட் துரைராஜ்
தேவகிருபை
சிசிலியா ஜெயபிரகாஷ்

**கோயம்புத்தூர்**
அருணோதயம் வில்லியம்
ஜான்சி
வசந்த மல்லிகா
கிறிஸ்டிபாய் வாசன்

**தேனி**
சுசீலா ஜான்
எலிசபெத் பால்ராஜ்
சுசீலா
நேசமணி சாமுவேல்
மாலா வில்சன்
பொன்ராணி அன்புநாதன்

**புதுக்கோட்டை**
சாந்தி வில்லியம்

**தஞ்சாவூர்**
ராஜா சமாதானம்
குணசீலி ஸ்டீபன்
ரோஸ்லின் செல்வராணி
பிரமீளா செல்வம்
சாந்தி குணசேகரன்
ஜோசப்பின் செல்லத்தாய்
மல்லிகா ஞானபாய்

**சிவகெங்கை**
அன்பு கமலம்
பாலின் மார்டின்
லலிதா பெவின்சன்

**ஈரோடு**
சரோஜினி துரைராஜ்
இமாகுலேட் விக்டர் பாபு
ஜெயகுமாரி
பென்னி
ரூத் நேசமணி

**பெங்களூரு**
டாரத்தி சாந்தகுமாரி
சூர்யா ரிச்சர்ட்சன்
பால்ராஜ்
லதா கிரேஸ்
சில்வியா ராஜகுமாரி

**நீலகிரி**
ஜெரில்டா
சோபியா நரேந்திரன்
ஜாய்ஸ் ஸ்டீபன்ராஜ்
ஸ்வீட்டி மைக்கேல்

**சேலம்**
இவாஞ்சலின் ஜோன்ஸ்
ரோலண்ட் அருள்ராஜ்

**இராமநாதபுரம்**
ஸ்டெல்லா வசந்தகுமாரி

**பாண்டிச்சேரி**
பியூலா ஜெசுராஜன்

**திருப்பூர்**
கனகசத்தியவதி
தேவி ராஜாசிங்

**திண்டுக்கல்**
கெத்ஸி எலிசபெத்
அனிதா மெர்லின்
அகஸ்டி ராபர்ட்

**மும்பை**
லீலா ஏர்னஸ்ட்

**விருதுநகர்**
லீலாவதி பால்சிங்
பிளாரன்ஸ் ராஜமோகன்
பொன்னுத்தாய்

**வேலூர்**
மெர்ஸி புளோரா

**பெரம்பலூர்**
சுகுந்தகுமார்

**ஆந்திரா**
ஷேரன் ராஜேஷ்

# வேத வினாக்கள்

**ஜுன் - 2025**

**( யோவான்: 1 முதல் 7 அதிகாரங்கள் வரை)**

**பொருத்துக**

1. தோற்றம் – குளம்
2. திபேரியா – முத்திரை
3. பெதஸ்தா – சீகார்
4. சமாரியா – கலிலேயா
5. சாட்சி – நீதி

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. ..... சந்ததியிலும் தாவீது இருந்த ..... ஊரிலுமிருந்து ..... வருவார் என்று ..... சொல்லவில்லையா?
2. ..... ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு ..... உண்டென்று எண்ணுகிறீர்களே.
3. இதோ நீ ..... அதிக ..... உனக்கு வராதபடி இனிப் .....
4. தேவன் ..... அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ..... ..... அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்.
5. ..... பிறப்பது மாம்சமாயிருக்கும் ..... பிறப்பது .....

**விடை எழுதுக**

1. எந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள்?
2. ஜனங்கள் இயேசுவைத் தேடிக் கொண்டு எங்கு வந்தார்கள் ?
3. எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தவன் யார்?
4. நித்திய ஜீவனை உடையவனாயிருப்பவன் யார்?
5. அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லோரும் எதைப் பெற்றோம்?

**தொகுப்பு:** Mrs. **மெர்ஸி கிறிஸ்டோபர்,** *சென்னை.*

- விடைகளுடன், வேத ஆதாரங்களையும் எழுதுங்கள்.
- விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதக்கூடாது.
- வினா எண்ணைக் குறிப்பிட்டு, பதில்களை மட்டும் எழுதுங்கள்.
- வளரும் விண்ணரசு இதழின் சந்தா எண் மற்றும் அலைபேசி எண்ணுடன், உங்கள் **முழு முகவரியையும்** எழுதுங்கள்.
- சரியான விடை எழுதியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**வேதவினா–விடை, வளரும் விண்ணரசு,**
**58/1, முத்தாலம்மன் கோவில் தெரு,**
**சேலையூர், சென்னை – 600 073.**
**9003916480**

**உங்களது விடைகள் எங்களுக்கு வந்துசேர கடைசி நாள் இம்மாதம் 20ஆம் தேதி**

**மே மாத வேதவினா–விடை போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!**

1. **திருமதி. விஜயவல்லி ஜான் – திருநெல்வேலி**
2. **திருமதி. பிளாரன்ஸ் ராஜமோகன் – விருதுநகர்**
3. **திருமதி. திலீப்குமார் – திருச்சி**

# நடப்புச் செய்திகள்

**பெங்களூரு:** விரைவாக சார்ஜ் ஆகும் மற்றும் அதிக நேரம் நீடிக்கும் சோடியன் – அயன் பேட்டரியை பெங்களூரு விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். எரிபொருள் விலையும் காற்று மாசுபாடும் அதிகரித்து வரும் இக்காலத்தில் மக்களுக்கு சிக்கனமான பயணத்தை வழங்கவும் காற்று மாசுபாட்டை குறைக்கவும் எலெக்ட்ரிக் வாகனங்கள் அவதரித்தன. தற்போது இந்த வாகனங்கள் இயங்க தேவையான பேட்டரி, லித்தியம்–அயன் தொழில்நுட்பத்தில் உருவானதாக உள்ளது. இந்த பேட்டரிகளின் விலை அதிகமாக உள்ளது. இதற்கு உலக அளவில் லித்தியம் வளம் குறைவாக இருப்பதும் காரணமாக உள்ளது. இந்நிலையில் லித்தியன் அயன் பேட்டரிக்கு மாற்றாக சக்திவாய்ந்த சோடியன்–அயன் பேட்டரியை பெங்களூரு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தன்னாட்சி நிறுவனமான ஜவஹர்லால் நேரு மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ள இந்த பேட்டரி வெறும் 6 நிமிடத்தில் 80 சதவீதம் சார்ஜ் ஆகக் கூடியது. மேலும் அதிக நேரம் நீடிக்கக் கூடியது. பேராசிரியர் பிரேம்குமார் செங்குட்டுவன் தலைமையிலான விஞ்ஞானிகள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் பிப்லப் பத்ரா இணைந்து இதனை உருவாக்கியுள்ளனர்.

**உங்களுக்காக எழுதும் உதவியாளர்!** குரல்வழி டைப்பிங் பிரபலமாகவும் எளிதாகவும் இருப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். இதற்கென பிரத்யேகச் சேவைகளும் இருக்கின்றன. இப்போது, மைக்ரோசாப்டின் எழுது மென்பொருளான வேர்டிலும் குரல்வழி டைப்பிங் வசதி அறிமுகம் ஆகியுள்ளது. வேர்டு மென்பொருளின் இல்லத்தி லிருந்து, டிக்டேட் பட்டனை கிளிக் செய்து, எழுத நினைப்பதை பேசத் தொடங்கினால், திரையில் தானாக வாசகங்கள் டைப் ஆகிவிடுகின்றன. நிறுத்தல் குறி போன்றவற்றையும் பேச்சிலேயே குறிப்பிடலாம். இவ்வளவு ஏன், எந்த இடத்தில் வார்த்தைகளைப் பெரிதாக்க வேண்டும் என்பது போன்ற ஃபார்மட் சார்ந்த கட்டளைகளையும் குரல் வழியே வழங்கலாம். வேர்டில் எழுதவும் பயன்படுத்தலாம். குறிப்புகளை எழுதி வைக்கவும் செய்யலாம். ஆங்கிலம், பிற மொழிகளில் பயன்படுத்தலாம். ஆனால், இதற்கு மைக்ரோசாப்ட் 365 சேவையை வைத்திருக்க வேண்டும்.

நன்றி: தி இந்து தமிழ் திசை (19 & 21/05/2025)

**புதுடெல்லி:** நெட்டிசன்கள் தகவல்களை தேடுவதற்கு முந்தைய காலத்தில் குரோம் இண்டர்நெட், மொசில்லா பயர்பாக்ஸை அதிக அளவில் பயன்படுத்தி வந்தனர். இந்த நிலையில், குரோம், கூகுள் அறிமுகம் செய்யப்பட்டதையடுத்து உலகின் தேடு பொறியில் இன்று வரை அந்த பிரவுசர்கள்தான் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. ஆனால், சுந்தர்பிச்சையின் கூகுளின் ஆதிக்கம் விரைவில் முடிவுக்கு வரும் என்று தற்போது நெட்டிசன்கள் வட்டாரத்தில் பேசத் தொடங்கிவிட்டனர். அதற்கு காரணம் இந்தியர் ஒருவர் கூகுளுக்கு சவால் அளிக்கும் வகையில் தேடு பொறி என்ஜினை ஏஐ அடிப்படையில் உருவாக்கியுள்ளதே முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

பெர்பிளக்சிட்டி படைப்பாற்றல் மிக்க ஏஐ நிறுவனம். இதன் நிறுவனர் இந்தியரான அர்விந்த் ஸ்ரீநிவாஸ். இவரது நிறுவனம், விரைவில் காமட் என்ற அதன் சொந்த பிரவுசரை வெளியிட உள்ளது. இது, கூகுளுக்கு கடும் போட்டியை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது. ஏஐ அடிப்படையில் இயங்கும் காமட், ஆழ்ந்த ஆராய்ச்சி மற்றும் தானியங்கி பணிகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கக்கூடியது. எனவே இது, இண்டர்நெட் பிரவுசிங் எதிர்காலத்தை மாற்றியமைக்கும் என்று கூறப்படுகிறது. பெர்பிளக்சிட்டி நிறுவனர் அர்விந்த் ஸ்ரீநிவாசனின் காமட் பிரவுசரை உருவாக்கும் திட்டத்தில், என்விடியா, சாப்ட்பேங், அமேசான் நிறுவனர் ஜெப்பெசோஸ், ஓபன் ஏஐ, மெட்டாவின் யான் லிகுன் போன்றவர்கள் பெரும் நம்பிக்கை வைத்து முதலீட்டை வாரி இறைத்துள்ளனர். இவரது பெர்பிளக்சிட்டி நிறுவனம் ரூ. 4,400 கோடி நிதி திரட்டியதையடுத்து, அதன் ஸ்டார்ட்அப் மதிப்பு விரைவில் 14 பில்லியன் டாலரை அதாவது ரூ.1.2 லட்சம் கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

58/1. முத்தாலம்மன் கோவில் தெரு, சேலையூர், சென்னை–73
9442150482 email: contacticgm@gmail.com

## அருட்பணியாளர்களின் குழந்தைகள் கல்வி நிதிக்காக...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகள்.

இந்தக் கல்வியாண்டு ஆரம்பமாயிற்று. ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துவரும் கல்விக்கட்டணத்தை, அருட்பணியாளர்கள் தங்களுடைய குறைந்த வருமானத்தில் சந்திப்பது என்பது மிகப்பெரிய சவால் என்பது நிதர்சனமான உண்மை.

அருட்பணியாளர்கள் அருட்பணியில் முழுக்கவனம் செலுத்த, அவர்களுடைய குழந்தைகளின் கல்விக்கட்டணம் என்ற மாபெரும் சுமையை இறக்கி வைப்பதே நமது இன்றியமையாத இலக்காகும். இந்தக் கல்வியாண்டும் அருட்பணியாளர்களுடைய குழந்தைகளின் கல்விக்கட்டணத்துக்கு, உங்கள் காணிக்கைகளை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்கு கடன்பட்டவர் கண் திறக்கவே, என்ற இந்தக் கீர்த்தனைப் பாடல், நமது சிந்தையாகட்டும். அருட்பணியாளர்களுடைய குழந்தைகளின் கல்வித் தேவைக்காக நமக்கு 15 இலட்சம் தேவைப்படுகிறது. இந்தத் தேவைகளுக்காக ஜெபித்து, ஆதரவளிப்பவர்கள், கீழ்க்கண்ட வங்கிக்கணக்கிற்கோ, அல்லது **QR** கோடை வருடியோ அல்லது நமது தரிசனம் பரப்பும் ஊழியர்களிடமோ உங்கள் பங்கை கொடுத்து உதவுங்கள்.

அருட்பணியாளர்களை கனப்படுத்தும் தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**நமது தேவை ₹15.00 இலட்சம்**

கிறிஸ்துவின் பணியில்
அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,
பொதுச்சேவகர்

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number : 10143136773**
**Bank : State Bank of India**
**Branch Name : Selaiyur, Chennai- 600073**
**IFSC Code : SBIN0007948**

icgm1014@sbi

ICGM

**Registered with RNI Under No:TNTAM/2000/01585**

**Postal Registration No: TN/MA/42/2024-2026 WPP No: TN/WPP-20/SR/2024-2026**

Posted at BPC Madurai - 625 001.

Date of publishing: 28th May 2025 Date of posting - 28,29 & 30th May 2025.

**Printed by Mr.S.Gunasekaran and Published by Mr.D. Thirugnanam on behalf of Irai Arasu Trust and printed at Sharon Print System, No:51/71, Ahimsapuram First Street, Near Saraswathi Theatre, Sellur, Madurai-625002 and Published at Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai-625021, Editor Mr.G. Ponnuraj.**

## பொதுச்சேவகரிடமிருந்து... தொடர்ச்சி...

முறையில் வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டங்களோடு இந்த வருட வேதாகமப் பள்ளி நிறைவு பெற்றுள்ளது. இதில் கலந்து கொண்ட சிறுவர்–சிறுமிகள் தொடர்ந்து ஓய்வுநாள் பள்ளியில் பங்குபெற ஜெபியுங்கள்.

புதிய கல்வி ஆண்டில் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்படும் காலம் இது. குறைந்த வருவாயுடைய அருட்பணியாளர்கள் தங்கள் குழந்தைகளின் கல்விக் கட்டணத்தைச் சிரமமின்றி செலுத்த, தாராளமாய் கொடுத்து உதவ உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான நமது மொத்தத் தேவை ரூ.15.00 இலட்சம்.

மகாராஷ்டிராவிலுள்ள சந்திரப்பூர் மாவட்டத்தில் மே 26–28 ஆகிய தேதிகளில் ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள் ஆகியோருக்கு சிறப்பு ஊழியப் பயிற்சிக்கூட்டங்கள் நடைபெற்றன. உம்ரி மிஷன் மருத்துவமனை வளாகத்தில் இதற்கான இடத்தை கொடுத்து உதவிய, தலைமை மருந்தாளுனர் திரு. சாம் அவர்களுக்கும், திருமதி. எலிசபெத் அவர்களுக்கும் இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வட இந்தியாவில் மூன்று ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக இவ்வாலயங்கள் கட்டி முடிக்கப்பட வேண்டும். இதற்கான தேவைகள் ரூ.15.00 இலட்சமாகும். இதற்காக ஜெபித்து, உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் அருட்பணிகளுக்காக தொடர்ந்து ஜெபித்து, தாங்கி வரும் உங்களை தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக.

தேவகிருபை, இரக்கம், சமாதானம் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் நிறைத்துக் காத்துக் கொள்வதாக.

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,
**அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,**
பொதுச்சேவகர்.

**If undelivered, please return to:**

**Valarum Vinnarasu, No.58/1. Muthalamman Koil Street,
Selaiyur, Chennai - 600 073. Tamilnadu.
Cell : 9442150482.**

icgm1014@sbi

ICGM

**To:**